உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்



யாழ்ப்பாணத்து நல்லூர்ச்

# சின்னத்தம்பிப் புலவர்

இயற்றிய

# மறைசையந்தாதி

## மூலமும்

மதுரைத் துரைத்தனத்தார்

வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

**சபாபதி முதலியாரவர்கள்**

இயற்றியவுரையும்

வெளியீடு :

[illegible]தி நீலாம்பாள் சுப்ரமணியம்

1971

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்



யாழ்ப்பாணத்து நல்லூர்ச்

## சின்னத்தம்பிப் புலவர்

இயற்றிய

# மறைசையந்தாதி

## மூலமும்

மதுரைத் துரைத்தனத்தார்

வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

## சபாபதி முதலியாரவர்கள்

இயற்றிய வுரையும்


வெளியீடு :

ஸ்ரீமதி நீலாம்பாள் சுப்ரமணியம்

1971

## ஆக்கியோன் பெயர்.

கட்டளைக்கலித்துறை

செந்தா தியன்மணிப் பூண்புவி யூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத் தியானஞ்செய் வில்லவ ராயன் றிருப்புதல்வ
னந்தா வளந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீ
ரந்தாதி மாலையை வேதாட வீசற் கணிந்தனனே.

இளங்கோ அச்சகம்,, அரிசிப்பாளையம், சேலம்-9.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கயிலாயபரம்பரை மெய்கண்டசந்தானபீடம்

தொண்டைமண்டலாதீனம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய

# முன்னுரை.

மறைசையந்தாதியை பாடியவர் யாழ்ப்பாணம் பெரும் புலவர். நாமகள் வரத்தால் நல்ல நூல்களை இயற்றியவர். மறைசையந்தாதியுரை புதிய பதிப்பு வெளியாகின்றது. இதனைப் பதிப்பித்து வழங்கும் புண்ணியர் சேலம் சைவத் திருவாளர் ர. சுப்ரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்; அவர்கள், உரிமையும் கல்வி கேள்விகளிற் சிறந்தவரும், அறிஞர் அன்பர் அருளாளர்பால் தொண்டுள்ளங் கொண்டு பல நல்ல திறத்தில் உபகாரம் புரிந்து வரும் பாங்கினரும், பூஜை முதலியவைவற்றால் திருவருட் செல்வத்தையும் வளர்த்துக் கொள்பவரும், எங்களிடம் சைவசித்தாந்தம் பாடங்கேட்டுணர்ந்தவரும்; இம்மடாலயத்துச் சீடர் குல பரம்பரையைச் சார்ந்தவரும் ஆகிய நிறை நாட் செல்வர் நீலாம்பிகையம்மையார் ஆவர். முன்னரும் 'ஆழ்வார்களும் நாயன்மார்களும்', 'திருப்புகழ் மகுடங்கள்' என்னும் பெயரிய நூல்களைத் தொகுத்து எழுதி வழங்கிய சீர்மிக்கவர். இப்பொழுது இவ்வுரையை வழங்குகின்றார். இதனை எழுதிய மதுரை மகாவித்துவ சிரோமணி சபாபதி முதலியார் இவ்வம்மையார்க்குப் பாட்டனார்.

அவர்கள் 1837 - ஆவது யாண்டிலே தொண்டை மண்டல (வழிவழிச் சைவ) முதலியார் மரபிற்றோன்றியவர். நல்லாசிரியர் பாற்கற்றுத் தமிழ்ப் புலமை மிக்கவர். பண்பிலும் சான்றவர். உலகம் புகழ வாழ்ந்தவர். கற்பிப்பதி

லும் செய்யுளியற்றுவதிலும் உரையெழுதுவதிலும் ஒப்புயர் வில்லாத உயர்ச்சி வாய்ந்தவர். மதுரையில் கலாசாலை யிற் செந்தமிழ்ப் புலவராய் 22 யாண்டு விளங்கியவர். 1889 ஆவது யாண்டிலே ஓய்வு (உபகாரப் பொருள்) பெற்று, உள்ளக்கிளர்ச்சியில் ஒரு சிறிதும் குறையாமல் மாணுக்கர்க்கு பற்பலர்க்குத் தமிழ் இலக்கண இலக்கியங் கள் கற்பித்துதவியவர். வடமொழியிலும் ஆங்கிலத்திலும் தேர்ந்தவர். கணித நூலிலும் வல்லவர். அக்கணிதத்திற் பயனும் உரைக்கும் கட்டுரையாளர். தருக்க சாத்திரமும் நன்கு கற்றவர். அக்காலத்தில் இத்தண்டமிழ் வாணரை அறியாதார் எவரும் இல்லையாம். சைவசித்தாந்த ஞான சாத்திரங்களையும் முறைப்படி ஓதியுணர்ந்தவர். திருவருட் செல்வர். அப்புலவரேறு 1898 ஆவது யாண்டில்(61வயதில்) ஆனித்திங்களில் திருவாலவாயுடைய பெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

1885 முதல் இவரிடம் பரிதிமாற் கலைஞன் என்னும் சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ., அவர்கள் தமிழ் கற்று நல்ல செந்தமிழ்ப் புலவர் ஆனுர். அவரொடு தமிழ் கற்ருேர் இருபதின்மர். அவருட்சிலரிடமிருந்து ''மதுரைமாலை என்னும் சிலேடையும் யமகமும் வாய்ந்த மிகச்சிறந்த பிரபந்தத்தையும் பெற்று வெளியிட்டுதவினுர். அது 20—6—1901 இல் வெளியிடப்பட்டது. அதற்கு யாம் எழுதிய உரை விரைவில் இந்தத் தமிழம்மையாரால் வெளி வர இருக்கின்றது.

மறைசை யந்தாதியுரைச் சிறப்புப்பாயிரச் செய்யுள் மூன்றும் இப்பதிப்பில் உள்ளன. அவற்றை நோக்கி நம் முதலியார் சிறப்புக்களை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். மிக்கபுகழ்பெற்று விளங்கிய யாழ்ப்பாணம் சி. வை. தாமோ தரம் பிள்ளை பி. ஏ; பி. எல்;

' வல்ல தமிழ்தேர் மதுரைச் சபாபதிவேள்
காதுக்கு அமிழ்து ஏர்மதுரம் அமைத்துச்
சொல்லுக்கு நல்லவுரை சூழ்ந்தளித்தான் '

என்று பாடினர். சாத்திரியார் என் சிந்தையுறை வோன், என்று நம் சிந்தை குளிர்விக்கின்றார். சின்னசாமிப் புலவர் பாட்டு சபாபதி முதலியாரைச் செங்கதிரோன் என்றுருவகித்து அரியகருத்து விளங்கச் செய்கின்றது.

மறைசை யந்தாதிக்கு உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் எழுதி வெளியிட்ட வுரை யொன்று உண்டு. அதனின் வேறு இவ்வுரை. 1912 இல், ரிப்பன் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டதும் இம் முதலியார் எழுதியவுரையேயாகும். ஆயினும், எஸ். அனவரத விநாயகம் பிள்ளை எம். ஏ; எல். டி; எழுதிய முன்னுரை முடிவில், "இச்சரித்திரக் குறிப்பில் பிரஸ்தாபிக்கப் பட்ட சிவசம்புப் புலவர் உரையே யன்றி மதுரையம்பதி மகாவித்வான் என விளங்கிய சபாபதி முதலியார் உரை யொன்றும் உண்டு. அவை அருகி வழங்குதலானும் தமிழ் கற்கும் மாணவர்க்கு உரையொடு கூடிய மறைசையந்தாதிப்பதிப்பொன்று அவசியமாயிருத்தலானும் இது பிரசுரிக்கப்பட்டது." என்றிருக்கின்றது. அப்பதிப்பில் உள்ளதும் 1893 (விஜய. ஆடி, 18) இல் வெளிவந்த பதிப்பில் உரையும் ஒரெழுத்தும் வேறுபடாதுள்ளன. அம் முன்னுரையின் முடிவு ஏன் அப்படி ஆயிற்றோ?

சிவம்.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

மகா-ா-ா-ஸ்ரீ யாழ்ப்பாணம்
சி, வை. தாமோதரம்பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
சொல்லிய

நேரிசை வெண்பா.

நல்லைச்சின் னத்தம்பி நான்மறைசை யந்தாதிச்
சொல்லுக்கு நல்லவுரை சூழ்ந்தளித்தான்—வல்ல
தமிழ்தேர் மதுரைச் சபாபதிவேள் காதுக்
கமிழ்தேர் மதுர மமைத்து.

---

சென்னைக் கிறித்தவக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரு
மிந்நூலுரையாசிரியர் மாணுக்கருளொருவருமாகிய பிரமஸ்ரீ
வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள். பி. ஏ.
சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செந்தமிழ்க்கு வரம்பான தென்னிலங்கைத்
தீவினல்லைச் சின்னத் தம்பி
தந்ததிரு மாமறைசை யந்தாதி
தனக்கொருரை சாற்றி ஞனல்
விந்தைகுடி வந்தசபா பதிமதுரை
வியனகரான் விரியச் செய்தென்
சிந்தையுறை வோன்புலவர் செவிக்கமிழ்தஞ்
சுவைக்குமின்பந் தெவிட்ட மாதோ

## உரைச்சிறப்புப்பாயிரம்.

சென்னைக் கிறித்தவக்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும்
புரசையஷ்டாவதானஞ் சபாபதிமுதலியாரவர்கள்
மாணுக்கருளொருவருமாகிய மகா-ா-ஸ்ரீ
திரு. சின்னசாமிப்பிள்ளையவர்கள்
சொல்லிய

### கட்டளைக்கலித் துறை

சீரார் மறைசையந் தாதிச் செழுமல ரின்பொருட்டேன்
பாரா ரெனுஞ்சுரும் புண்ணப் பரிவொ டலர்த்தினனு
லேரார் மதுரைப் பதிவாழ் சபாபதி யேந்தலெனு
நீரார் சுகுணச் சுடர்க்கதி ரோனிந்த நீணிலத்தே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்

# மறைசை யந்தாதி

## மூலமும் உரையும்.

### காப்பு.

*அந்தமுமாதியு மில்லாமறைசையி லத்தர்தம்மேற்*
*செந்தமிழ்நூற்பொரு ளந்தாதிபாடச் சிலம்பிலன்னை*
*யிந்தனவாணுதற் சுந்தரியம்பிகை யீன்றெடுத்த*
*சுந்தரவீரகத் திச்சேதகன்றுட் டுணைதுணையே.*

(இ-ள்.) ஆதியும் அந்தமும் இல்லா மறைசையில் அத்தர்தம்மேல்-முதலும் (நடுவும்) ஈறுமில்லாத திருமறைக்காடென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான்மீது, செந்தமிழ் நூற்பொருள் அந்தாதி பாட - செந்தமிழ்ப் பிரபந்தங்களிற் புகழ்ப்பொருளமைதற்குரிய வந்தாதியாகிய விதனையான் பாடும்வண்ணம், சிலம்பில் அன்னை இந்து அன வாள் நுதல் சுந்தரி அம்பிகை ஈன்று எடுத்த - இமயமலையில் அவதரித்தருளிய உலகமாதாவும் பிறைபோலும் ஒளிபொருந்திய நுதலினையுடைய சௌந்தரியத்தை யுடையாருமாகிய உமாதேவியார் பெற்றுக் கையின்கண்சீராட்டப்பெற்ற, சுந்தரவீரகத்திச்சேதகன் - அழகிய வீரகத்திச் சேதகவிநாயகக்கடவுளது, துணைத்தாள்துணை - இரண்டு திருவடிகளுந் துணையாக நிற்பனவாம் (எ-று,) வீரகத்திச் சேதகன் - வீரக்கொலைப் பழியைப் போக்கியருளியவர். ஆதியு மந்தமுமென்றதனுல் நடுவும் என வருவிக்கப்பட்டது. தம்-சாரியை இந்தன வென்பதிற் குற்றுகரங்கெட்டது. ஏகாரம் - ஈற்றசை.

## நூல்.

**திருவாரணங்கு மணமகன் பூசித்த செல்வர்வெள்ளைக்**
**கருவாரணங்கு முறும்பண்ணைசூழ்மறைக் காடரிசை**
**மருவாரணங்கு திரையாரைப்பாடுமென் வாய்க்கவிதைக்**
**கிருவாரணங்குசெய்பூண்முலைப்பாமயி லென்றுணையே**

(இ-ள்.) திரு ஆர்அணங்கு மணமகன் பூசித்த செல்வர் - சீதேவிக்கும் பூதேவிக்கும் நாயகனுகிய திருமாலாற் பூசிக்கப் பெறுஞ் செல்வமுடையார், வெள்ளைக்கருவாரணம் குமுறும் பண்ணை சூழ்மறைக்காடர் - வெண்மையாகிய சூற்சங்கங்கள் ஒலிக்கும் வயல்சூழ்ந்த திருமறைக்காடென்னுந் திருப்பதியை யுடையார், இசைமருவு ஆரணம் குதிரையாரை - பண்ணமைந்த வேதமாகிய குதிரையையுடைய இச்சிவபெருமானை, என் வாய்பாடும் கவிதைக்கு - என்வாயாற் புகழ்ந்துபாடும் இந்நூல் நிறைவேறும் பொருட்டு, இருவார் அணங்கு செய் பூண்முலைப்பாமயில் என்துணை - பெரியகச்சினுக்கு அழகுசெய்யும் பூணினைத் தரித்த முலையினையுடைய கலைமகள் எனக்குத்துணையாக நின்றனள் (எ-று.) திருவாரணங்கு என்பதில் ஆர்-பூமி. கவிதை கருவியாகு பெயர். இது சிவபெருமானைத்துதிக்குந் தமக்குக் கலைமகள் துணையாய் உடனின்றுதவுமாறு செய்யுந் திருவருண் முறைமை கூறியதாம். இவ்வாறு அடியார்களுக்குக் கலைமகள் துணையாவது ''ஞானவாணி வந்திறுத்தன ளன்பர் தந்நாவில்'' என்பது முதலியவற்ருலுணர்க. இதனைக் கலைமகள் வணக்கமெனக் கொள்ளின் அது சிறப்புப்பாயிரத்தின் பாற்பட்டுப் புறவுரையா மாதலின் நூலின் அகத்தே கூறுதல் வழுவா மாதலானும் சிவபெருமான்மீது நூறுகவியியற்றுகவென்னும் நியமத்தில் ஒன்று குறைபட்டு அந்தாதியிலக்கணத்தோடு மாறுபடு மாதலானும்அக்கருத்துப் பொருந்தாமையுணர்க. அன்றியும் ''என்றுணையே'' என்பதில் என் என்பதை வினுவினைக் குறிப்பாக்கி, அருளே

துணையாங்காற்கலைமகள் துணை என்ன? துணையன்று, எனப் பொருள் கூறுவார்க்கும் அருளின் வழியே துணையாகிய கலைமகளைத்துணையன்றெனல் உண்மையோடு மாறுபடுமாறும் உணர்க. (1)

**என்றுடலையொன்று காலனைத்தாக்கி யெழிற்கனக**
**மன்றுடலைச்செய்து வான்பரவைப்பெயர் மண்ணும்விண்ணுஞ்**
**சென்றுடலைக்கடை வாயிற்படியினிற் சேர்ந்துவைகு**
**முன்றுடலைவைப் பதுமறைக்காட்டி லுறைபரனே.**

(இ-ள்.) என்று - எந்நாளோ, ஆடலை ஒன்றுகாலனைத்தாக்கி - வலியினைப்பெற்ற இயமனை உதைத்தும், எழிற்கனக மன்று ஆடலைச்செய்து - அழகிய கனகசபையிற் றிருநடனம் புரிந்தும், வான்பரவைப்பெயர் மண்ணும் விண்ணும் சென்றுள் - மேன்மையாகிய பரவையாரென்னுந் திருநாமம் மண்ணுலகும் விண்ணுலகுஞ் செல்லும்வண்ணம் வாழ்ந்தவரது, தலைக்கடைவாயிற் படியினும் சேர்ந்துவைகும் - திருமாளிகை வாயிற்படிக்கண் (சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தூதாகச் சென்றருளிப்) பொருந்தியுமுள்ள, உன்தாள் தலை வைப்பது மறைக்காட்டில் உறைபரனே - உமது திருவடிகளை என்றலைமேல்வைத்தருளுவது திருமறைக் காட்டில்வீற்றிருக்கின்ற சிவபெருமானே (எ-று.) உமது திருவடிகளை என்றலைமேல் வைத்தருளுவது எந்நாளோ வெனக் கூட்டுக. தலைக்கடை- ஈருருபிணைந்த பெயர், மாளிகையென்பது பொருளாம். (2)

**பரமரம்பாலிகைச் செம்பவளக்கொடி பங்கர்சுரும்**
**பரமரம்பரனை யெரித்தார்மறைசைப் பதியர்வரிப்**
**பிரமரம்பாடிய பொற்கொன்றைத்தாமரைப் பேசுதியோர்**
**தரமரம்பாவிநெஞ் சேவினையாங்குருந் தாதினுக்கே.**

(இ-ள்.) பரமர் - மேலாயவர், அம்பாலிகைச்செம்பவளக்கொடிபங்கர்-அழகிய அதரம் செவ்வியபவளம்போன்ற பூங்கொடியையொத்த உமாதேவியாரைப் பாகத்திலுடை

யார், சுரும்பர் அமர் அம்பானே எரித்தார் - வண்டுகள் பொருந்துகின்ற (மலராகிய) அம்பினேயுடைய மன்மதனே எரித்தவர், மறைசைப்பதியார் - திருமறைக்காட்டினேயுடையார், வரிப் பிரமரம்பாடிய பொற்கொன்றைத்தாமரை - வரிகளேயுடைய வண்டுகளிசைபாடப்பெற்ற பொன் வண்ணக் கொன்றைப் பூமாலேயினேயுடைய இச்சிவபெருமானே, பேசுதி ஓர் தரம் பாவிநெஞ்சே வினேயாம் கருந்தாதினுக்கு அரம் - ஓர் தரமேனுஞ் சிந்திப்பாயாக பாவத்தால் நிறையப்பெற்ற மனமே உனது தீவினேயாகியகடியவிரும்பை அராவி அழிப்பதற்கு அதுவே யரமாகும் (எ-று.) சுரம் பரமரம்பு என்பதற்குச் சுரும்பாகிய நாணின் கட்பொருந்திய மலரம்பெனினுமாம். பேசுதி என்பது மனதின்ருெழிலாதலாற்சிந்திப்பாயாகவென்னப் பட்டது. வாக்காகிய கருவியால் மனமே பேசுதியெனினு மிழுக்காது. (3)

**கருந்தாதையன்ன கயவர்தம்மீதிற் கவிதைசொல்லி**
**வருந்தாதையாநநன் வேதாரணியன்வை வேற்குகனேத்**
**தருந்தாதைதெய்வ மணங்கமழ்சேவடித் தாமரை [மே**
**பொருந்தாதையோநினே வில்லாவென்சித்தப் பொறிச்சுரும்**

(இ-ள்.) கருந்தாதை அன்ன கயவர்தம்மீதில் - இரும்பைப்போலுங் கடினசித்தமுடைய கீழோர்பேரில், கவிதை சொல்லி வருந்தாது - யான் கவிதைகள் பாடி வருந்தாமல், ஐஆநநன் - ஐந்து திருமுகங்களேயுடையாரும், வேதாரணியன் - திருமறைக்காட்டீசரும், வைவேல்குகனேத் தரும்தாதை - கூரிய வேலேத்தரித்த முருகக்கடவுளேப் பெற்றபிதாவுமாகிய சிவபெருமானது, தெய்வமணம் அடித்தாமரைமேல் - திவ்விய வாசனேகமழும் திருவடியாகிய செந்தாமரை மலர்களிடத்து, என்சித்தநினேவு இல்லாப்பொறிச்சுரும்பு-என்மனமாகிய அறிவில்லாத பொறிகளேயுடைய வண்டானது, ஐயோ பொருந்ாது - ஐயோ வீழ்கின்றதில்லே (எ-று) பொறி - புள்ளி, இந்திரியம்.

வண்டுகள் தாமரை மலரிற்றேனுண்ணச்செல்லுமாறு போல ஊழ்வினையினாலே என்மனம் சிவபெருமான் றிருவடிகளில் ஆனந்த நுகர்ச்சியின் பொருட்டுச் செல்கின்றதில்லை என்பதாம் (4)

**கரும்ப ரவைக்கிசை தாமரை யோவிடந் தொல்புவியோ**
**கரும்ப ரவைக்கண் ணியலேது தூதிருட் காலமுல்லை**
**யரும்ப ரவைப்பயி லும்வா ணகையல்கு லன்னமென்ன**
**வரும்ப ரவைக்கு நடந்தார் மறைசை வரையிறையே.**

(இ-ள்) கரும்பரவைக்கண் இயல் ஏது - கரிய கடல் போலுங்கண்ணினையுடைய தலைவியின் இயல் யாது?, இடம் கரும்பூர் அவைக்கு இசை தாமரையோ தொல் புவியோ?- (அவள் வாழும்) இடம் வண்டினது கூட்டந் தேனுண்ணுதற்கமைந்த தாமரைமலரோ? அல்லது பழைய பூமியோ? (யாது?), இருட்காலம் தூது - இருளையுடைய இராக்காலத்து (ச்சுந்தரமூர்த்தி நாயனாருக்கு)த்தூதாக, முல்லை அரும்பு அரவைப்பயிலும் வாள்நகை அல்குல் அன்னமென்னவரும் பரவைக்கு நடந்தார் - முல்லையரும்பினையும் பாம்பினது படத்தினையும் போன்ற ஒளி பொருந்திய பல்லையும் நிதம்பத்தையு முறையேயுடைய அன்னம் போலுலாவும் பரவையாரிடத்துச்சென்றருளிய சிவபிரானது, மறைசைவரை இறையே - திருமறைக் காட்டுமலையினிடத்தேவசிக்குந்தலைவனே — (எ-று) இயல்-இலக்கணம். கரும்பரவைக்கண் அன்மொழித்தொகை. அரும்பரவைப்பயிலும் வாணகையல்குல் நிரனிறைப்பொருள்கோள். "தாமரையோ பெருந்தொல்புவியோ" எனப் பாடமாயின் சாத்தன் இவ்வூர் என்பதற்கு சாத்தன் வாழுமிடம் இவ்வூரென்றாற்போலத் தாமரையோ புவியோ வாழுமிடம் எனப் பொருளுரைத்துக்கொள்க. இது தலைவனிடத்துப்பாங்கன் தலைவியின் இயலிடங்கேட்டல் ஆம். (5)

**வரைச்சங் கரிக்கு மணவாளர் கூடல் வளர்ந்திடுமூ**
**வுரைச்சங் கரிக்கு வனஞ்சூழ் மறைசையி லுத்தமநா**
**தரைச்சங் கரிக்கு விடப்பாணி சக்கரத் தானைதொட்ட**
**திரைச்சங் கரிக்குந் தெரியாப் பதநிழல் சேர்மின்களே.**

(இ-ள்.) வரைச்சங்கரிக்கு மணவாளர் - இமயமலையில் அவதரித்த உமாதேவியாருக்கு நாயகர், கூடல் வளர்ந்திடு மூவுரைச்சங்கர் - மதுரையில் வளர்ந்தோங்கிய முத்தமிழ்ச்சங்கத்தி லமர்ந்தவர், இக்குவனஞ்சூழ்மறைசையில் உத்தமநாதர் - கருப்பஞ்சோலைசூழ்ந்த திருமறைக்காட்டிலிருக்கும் மேலாகிய தலைவர், கரிக்கு ஐச்சம் விடப் பாணிசக்கரத்தானை தொட்ட-(தன்னையழைத்த) யானைக்கு அச்சம் நீங்க (மடு) நீரினுள்ளே சக்கரப்படையையேவிய, திரைச்சங்கு அரிக்கும் தெரியாப் பதநிழல் சேர்மின்களே - கடலிற்றோன்றிய சங்கத்தையுடைய திருமாலுக்கும் அறிதற்கரிய அவரது திருவடி நீழலிற் சென்றடைவீர்களாக் — (எ-று.) 3 ஆம் அடியில் அச்சம் ஐச்சமெனப் போலியாயிற்று.

**மின்னஞ்சு கங்கைச் சடாதரன் சத்த விடங்கன்றிரை**
**வன்னஞ்சு கந்தவன் மாமறைக் காடற்கு மாதொரிராப்**
**பன்னஞ்சு கமென வேள் காம காண்டப் பகழியினு**
**லின்னஞ்சு கமில்லை யென்றத்தை யோது மினந்தத்தையே.**

(இ-ள்.) மின் அஞ்சு கங்கைச்சடாதரன் - மின்னலுமஞ்சு மொளியினையுடைய சடையிற் கங்கையையுடையார், சத்தவிடங்கன் - சத்தவிடங்க மூர்த்தமாயுள்ளார் திரைவல் நஞ்சு உகந்தவன்-கடலிற்றோன்றிய வலியவிடத்தினை விரும்பியுண்டருளினோர், மாமறைக்காடற்கு - பெருமைபொருந்திய திருமறைக் காட்டினையுடையார் இவர்க்கு, மாதுஓர் இராப்பன்னஞ்சு உகம் என - உம்மை விரும்பிய மாதிற்கு ஒரு இராவே பதினைந்து யுகமென்று சொல்லும்

படி, வேள் காமகாண்டப் பகழியினுல்-மன்மதனது வில்லிற் ரெடுக்கு மலர் அம்பால், இன்னம் சுகம் இல்லை என்றத்தை இளந்தத்தையே ஓதும் - (வருந்தி) இன்னமுஞ் சுகமடைந் திலளென்னுமிதனை இளமைபொருந்திய கிளிகளே (போய்ச்) சொல்லுவீர்களாக-(எ-று.) காமகாண்டம் - மன் மதன்சிலை. இது கிள்ளைவிடு தூது. (6)

**தத்தலை வேலையன் காணுத வேதத் தனிவனத்து**
**முத்தலை வேலையன் வெற்பினம் மாது முளரியடி**
**யத்தலை வேலையன் முட்சொரி பாலை யருஞ்சுரத்து**
**வைத்தலை வேலையன் பாலென்னை நாடி வரவெண்ணுமே.**

(இ-ள்.) தத்து அலைவேலையன் காணுத-மோதுகின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலையுடைய திருமாலும் காண்டற்கரிய, வேதத்தனிவனத்து முத்தலைவேல் ஐயன் வெற்பின்-ஒப்பற்ற திருமறைக்காட்டி லிருக்கின்ற மூன்று தலையையுடைய சூலாயுதத்தைத் தரித்த ஈசரது மலையினி டத்தே, நம்மாது - நம்முடையபெண்ணுனவள், முளரிஅடி வேல அத்தலை ஐயல்முட்சொரிபாலைஅருஞ்சுரத்துவைத்து அலைவேலை - தாமரைமலர்போன்ற (மெல்லிய) வடிகளை வேலமரங்கள் எவ்விடங்களிலும் முள்ளினைச் சொரி கின்ற பாலைநிலத்திலே காட்டுவழியில்வைத்து அலையும் போது, அன்பால் என்னை நாடிவர எண்ணுமே - அன்பினு லே என்னை நினைத்து என்னிடம்வர எண்ணுவாளோ— (எ-று.) இது உடன்போக்கில் நற்ருய்வருந்தல், அயல் ஐய லெனப் போலியாயிற்று. (8)

**வரபர சங்கர வேதா ரணிய மடங்கலஞ்சுஞ்**
**சரபர சங்கர ளம்பொதி வாய்விழித் தையல்பங்கி**
**னரபர சங்கர வியோலொளியி னணிதிகழும்**
**புரபர சங்கர வாநம ணுர்வரும் போதத்திலே.**

(இ-ள்.) வர - வரத்தைக்கொடுப்பவரே, பர-மேலானவரே, சங்கர - சுகத்தைச் செய்பவரே, வேதாரணிய-திருமறைக்காட்டையுடையவரே, மடங்கல்அஞ்சும் சரப - நரசிங்கமானது அஞ்சி யழிதற்குக் காரணமாகிய சரபவடிவங்கொண்டவரே, ரசம் கரளம்பொதிவாய் விழித்தையல் பங்கின் அர-அமிர்தமும் விட்மும் (முறையே) பொருந்திய வாயையுங் கண்ணையுமுடைய உமாதேவியாரைப் பாகத்திலுடைய சங்காரருத்தரே, பரசு அங்க-துதிக்கப்பெற்ற என்பினைத்தரித்தவரே, ரவிபோல் ஒளியின் அணிதிகழும் புர - சூரியனைப்போல ஒளியினாலே அழகுவிளங்குந் திருமேனியையுடையவரே, பரசு அம்கர - மழுவாயுத்தை அழகியகரத்திலுடையவரே, யமனூர்வரும் போதத்தில்வா-யமன் வருங்காலத்து (அடியேனை யாண்டுகொள்ளுமாறு) வந்தருளுவீராக - (எ-று.) போதத்தில் அத்துச்சாரியை. (9)

**போத வனத்த நவிராழி விற்கதை பூட்டுசிலை**
**மாத வனத்தன் மனதிக்கெட் டாத வரதனங்கி**
**யாத வனத்த நகுமதி மூன்றுகண் ணன்பொறியார்**
**வேத வனத்தன் பதம்பேணிற் பாச விலங்கறுமே.**

(இ-ள்.) போதவன் - தாமரைமலரில் வசிக்கும் பிரமனுக்கும், நத்தம் நவிர் ஆழிவிற்கதைபூட்டு சிலைமாதவன் -சங்கையும் வாளையும் சக்கரத்தையும் ஒளிபொருந்திய தண்டையும் நாண்பூட்டும் வில்லையுந் தரித்த திருமாலுக்கும், அத்தன் - பிதாவாயுள்ளார், மனதிக்கு எட்டாத வரதன் - மன முதலியவற்றிற்கு அகோசரமாயுள்ளவரதர், அங்கி ஆதவன் நத்தம் நகுமதிமூன்று கண்ணன் - அக்கினியும் சூரியனும் இரவில் விளங்கும் சந்திரனுமாகிய மூன்றையும் மூன்று கண்ணாக உடையார், பொறி ஆர் வேதவனத்தன் பதம்பேணிற் பாசவிலங்கு அறுமே - இலக்குமி வசிக்கப்பெற்ற திருமறைக்காட்டீசர் இவரது திருவடிகளை வணங்கிற் பாசமாகிய விலங்கு ஒழியும் -(எ-று.) (10)

**விலங்க லரிக்குலஞ் சூழ்மறைக் காடன் விரிந்ததுழா**
**யலங்க லரிக்கரு மாரூரி லோர்புற் றமர்ந்திருக்கு**
**மிலங்க லரிக்கட் களக்கறை யானைச்சற் றெண்ணுநெஞ்சே**
**கலங்க லரிக்குநந் தீவினை யான கருங்கலையே.**

(இ-ள்.) விலங்கல் அரி குலம் சூழ்மறைக்காடன் - குன்றுகளிற் சிங்கங்கள்சூழப்பெற்ற திருமறைக்காட்டி லெழுந் தருளியவராய், விரிந்த துழாய் அலங்கல் அரிக்கு அரும் ஆரூரில் ஓர் புற்று அமர்ந்து இருக்கும் - மலர்ந்த துளசிமாலையையுடைய திருமாலுக்கும் அறிவரிய திருவா ரூரில் ஓர் புற்றிடங் கொண்டருளிய, இலங்கு அலரி கண் களக்கறையானை - விளங்குகின்ற சூரியனாகிய கண்ணையும் கண்டத்தில் விடக்கறையினையுமுடையாரை, சற்று எண்ணுநெஞ்சே கலங்கல் - சிறிது சிந்திப்பாயாக மனமே கலக்கமுறாதே, நந்தீவினையான கருங்கலை அரிக்கும் - அவர் நமது தீவினையாகிய பெரிய மலையினைப்பொடியாக்குவர் —(எ-று.) அலரி - சூரியன், கண்வரி, இதில் ஆரூரில் ஓர் புற் றிலிருக்கும் வரிபொருந்திய கண்ணையுடைய கள்ளக் கறையானைச் சற்றெண்ணு அது நந்தீவினையாகிய கரிய ஆடையினை அரிக்கும் எனத் தொனிப்பொருள்படுமாறுங் காண்க. (11)

**கருங்கலை மானுமென் சித்தாச னம்புகுங் கண்ணுதலோ**
**னருங்கலை மானுறை வேதா ரணிய னணிவரைமேல்**
**மருங்கலை மாநதிக் கண்முலை யீருங்கள் வார்தடங்கண்**
**பொருங்கலை மானென்று வந்ததுண் டாகிற் புகன்றிடுமே.**

(இ-ள்.) கருங்கலைமானும் என் சித்த ஆசனம் புகும் கண்நுதலோன் - கருங்கல்லைப்போலும் திண்ணிய என்னி தயமாகிய ஆசனத்தினெழுந்தருளுகின்ற நெற்றிக்கண் ணினையுடையார், அருங்கலை மான் உறைவேதாரணியன் - அரிய கலைமகள்வாழுந் திருமறைக்காட்டீசர், அணிவரை

மேல்-அவரது அழகிய மலையினிடத்தே, மருங்கு அலமா நுதிக்கண் முலையீர் - இடையினைத்தளரச்செய்யும் கரிய சூசுகம் பொருந்திய முலையினையுடையீர், உங்கள்வார்தடங் கண் பொரும் கலைமான் ஒன்று வந்தது உண்டாகில் புகன் றிடும்ஏ-உங்களுடைய நீண்டகண்களையொத்த கலைமான் ஒன்று இங்கு வந்ததுண்டெனிற் சொல்லுவீராக—(எ-று.) இது கலைமான் வினுதல். (12)

புகரானை யீரு முரியானை வெண்பொருப் பானையெண்ணம்
பகரானை மேய்த்துவெண் பற்றுனை யாற்கைப் பகட்டைக்கவ்
யகராறை யச்சுட ராழிதொட் டாற்கரி யானைமறை [வி
நகரானை யன்றிச்சொ லாதிறைஞ் சாதென்ற ஞச்சிரமே.

(இ-ள்.) புகர் ஆனை ஈரும் உரியானை - புள்ளிகள் பொருந்திய யானையை உரித்ததோலினையுடையாரை, வெண்பொருப்பானை - வெள்ளிய கயிலைமலையுடையாரை, எண்ணம்பகர் - எட்டுக்கண்ணினையுடைய பிரமனுக்கும், ஆனை மேய்த்து வெண்பல் தானையால் கைப்பகட்டைக் கவ்வியகராறையச்சுடர் ஆழிதொட்டாற்கு அரியானை - பசுவினைமேய்த்து வெண்பல்லாகிய படையினுலே துதிக்கையினையுடைய யானையைப்பற்றிய முதலையானது மடியும்படி விளங்குகின்ற சக்ராயுதத்தைவிடுத்த திருமாலுக்கும் அரியவரை, மறைநகரானை - திருமறைக்காட்டையுடையாரை, அன்றி - அல்லது (மற்றொரு கடவுளை) என்றன் நாச்சொல்லாது சிரம்இறைஞ்சாது - என் நாத் துதியாது சிரம்வணங்காது—(எ-று.) (13)

சிரவர விந்தம் புனைமறைக் காடத்ரி சூலங்கொண்ட
கரவர விந்தம் பணித்தோன் மலைத்தென்றற் கன்றுயிர்க
வரவர விந்த மடநடைக் கோமள வஞ்சியிரு
ளிரவர விந்த மெனக்கிடந்தாள் பின்னை யென்செய்வளே.

(இ-ள்.) அரவு இந்து அம்புனைசிர - பாம்பையும் சந்

திரையும் கங்கையையும் தரித்தமுடியினையுடையவரே, த்ரி சூலங்கொண்டகர-முத்தலைச்சூலந்தாங்கிய கையையுடைய வரே, வரவிந்தம் பணித்தோன் மலைத்தென்றற்கன்று உயிர் கவரவர - மேலாகிய விந்தமலையைத் தாழ்த்திய முனிவரது பொதியமலையிற்றோன்றும் இளந்தென்றற் காற்று உயிரைப்பற்ற வருதலினாலே, இந்த மடநடைக் கோமள வஞ்சி - இந்த இள நடையினையும் அழகினையு முடைய கொடிபோன்ற பெண், இருள் இரவு அரவிந்தம் எனக்கிடந்தாள் பின்னை என் செய்வள் - இருளோடு கூடிய இரவில் தாமரை மலர் பொலிவழிந்திருக்குமாறு பொலி வழிந்திருந்தனள் பின் யாதுசெய்வள்—(எ-று.) இது தலைவி வருத்தமுரைத்தல். (14)

**செய்யரைக் கோடியை மாவுரி யாரைச் செழுங்கனன்மான்**
**கையரைக் கோடி புனைமறைக் காடரைக் கண்ணிற்கண்டாற்**
**பையரைக் கோடிமின் னார்மய லால்வரும் பாவமெல்லா**
**மையரைக் கோடி யருந்து களாகு மறிசித்தமே.**

(இ-ள்.) செய்யரை - சிவந்த வடிவுடையாரை, கோடு இயை மாவுரியாரை - கொம்பு பொருந்திய யானைத் தோலுடையாரை, செழுங்கனல் மான்கையரை - சுவாலிக்கும் அக்கினியையும் மானையும் ஏந்தியகையினையுடை யாரை, கோடி புனைமறைக்காடரை - கோடி தீர்த்தத் தைப் பொருந்திய திருமறைக்காட்டீசரை, கண்ணிற் கண்டால் - கண்களால் தரிசனம் பண்ணப்பெற்றால், பை அரைக்கோடி மின்னார் மயலால் வரும் பாவம் எல்லாம் - பாம்பினது படத்தையொத்த நிதம்பத்தின்மீது ஆடை யையுடைய மகளிரது காமமயக்கத்தால் வரும் பாவமெல் லாம், ஐ அரைக்கோடி அருந்துகள் ஆகும் சித்தமே அறி - இரண்டரைக்கோடி அரியதுகளாய் ஒழிவதாமென்று மன மே அறிவாயாக— (எ-று) நிதம்பத்தை அரை என்றது தகுதிவழக்கு. (15)

**சித்திர வன்னிக ருங்கொங்கை பங்கர்செற் ருர்புரமூன்**
**றத்திர வன்னிக் கருணகை யார்க்கிட மாகமநூன்**
**மித்திர வன்னியும் பூவையுங் கேட்டு வியந்துரைக்கும்**
**பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப் பதியகமே.**

(இ-ள்.) சித்திரவல் நிகரும் கொங்கைபங்கர் - அழகிய சூதாடு கருவியையொத்த தனத்தினையுடைய உமாதேவியாரைப் பாதி திருமேனியிலுடையவராகிய, செற்றுர் புரம் மூன்று அத்திரவன்னிக்கு அருள்நகையார் - பகைவரது திரிபுரத்தைத் தமது அம்பின்முனையாகிய அக்கினி கொள்ளும்படி செய்தருளிய நகையினையுடைய சிவபெருமானுக்கு, இடம் - இடமாவது, ஆகமநூல் மித்திரவன்னியும் பூவையும் கேட்டு வியந்துஉரைக்கும் - சிவாகமநூல்களை நட்பினையுடைய கிளிகளும், நாகணவாய்ப்புட்களும் (பெரியோர்கள் சொல்லக்) கேட்டதிசயித்துத் தாமும் சொல்லப்பெற்ற, பத்திரவன்னிமரஞ்சேர் மறைசைப்பதி அகமே - இலைகளையுடைய வன்னிவிருட்சங்கள் சூழப்பெற்ற திருமறைக்காடென்னும் திருப்பதியாகிய தானமேயாம். (எ-று) சித்திரவன்னி கருங்கொங்கை அன்மொழித்தொகை. அகமே என்பதை மனமே என விளியாக்கினுமாம். (16)

**பதிகம் பரிக்குங் குழன்மா தராயப் பரவையுள்ளே**
**வதிகம் பரிக்கு நிகர்விழி யாய்மலை மாதுகங்கா**
**ளிதிகம் பரிக்கு மணியாக மீந்தரு ளீசர்முத்தம்**
**பொதிகம் பரிக்குந் திரை வேலைவேத புரிவரைக்கே.**

(இ-ள்.) பதிகம் பரிக்கும் குழல்மாதர் ஆயப் பரவையுள்ளே - பாசியைப்போலுங் கூந்தலைத்தாங்கிய மாதர்கள் பரந்த நினது ஆயத்தினுள்ளே, வதிக அம்பு அரிக்கு நிகர்விழியாய் - போய்ப் பொருந்துவாயாக அம்பி

னையும் வண்டினையுமொத்த கண்ணினையுடையாய், மலை மாது கங்காளிதிகம்பரிக்கு - மலைமகளும் கங்காளியும் திகம் பரியுமாகிய தேவியாருக்கு, மணி ஆகம் ஈந்தருள் ஈசர் - அழகிய திருமேனியிற்பாதியைக் கொடுத்தருளிய சிவபெரு மானது, முத்தம் பொதிகம்பு அரிக்குந்திரை வேலை வேத புரி வரைக்கு ஏ - முத்துக்கள் நிறைந்த சங்கினை யரிக்கப் பெற்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த திருமறைக்காட்டின் வரையினிடத்தே - (எ-று.) வரையினிடத்தே ஆயத்துள் வதிவாயாக எனமுடிக்க. வதிக என்பதின் அகரந் தொகுக் கப்பட்டது. வரைக்கு வேற்றுமை மயக்கம் இது ஆயத் துய்த்தல். (17)

**புரியா ரநந்த னறியாப் பதம்பெறப் பொற்கயிலைப்**
**பெரியா ரனந்தனை வென்னடை பாகர் பிறப்பினிலங்**
**குரியா ரனந்த வளமறைக் காட்டைக் குறித்திருந்து**
**மரியா ரனந்தன் சிரமேற் புவித்தல மானவரே.**

(இ-ள்.) புரி ஆர் அம் நந்தன் அறியாப்பதம்பெற- புரி பொருந்திய அழகிய சங்கினையேந்திய திருமாலும் அறி தற்கரிய திருவடியை அடையும் பொருட்டு, பொற்கயிலைப் பெரியார் - அழகிய கயிலாயத்திலெழுந்தருளிய பெரியோ ரும், அனந்தனைவெல் நடைபாகர் - அன்ன நடையினை வென்ற நடையினையுடைய தேவியாரைப் பாகத்திலுடை யவரும், பிறப்பினில் அங்குரியார் - பிறப்பினிற்றேன்று த வருமாகிய சிவபிரானது, அனந்த வள மறைக்காட்டைக் குறித்திருந்து மரியார் - பல வளங்கொழிக்குந் திருமறைக் காட்டைத் தியானித்துக்கொண்டிருந்து இறவாதவர்கள், அனந்தன் சிரமேற் புவித்தலமானவரே - ஆதிசேடன் முடி மேற்சுமக்கும் இப்பூமியில் (அறிவினிற்சிறந்த) மனிதராவ ரோ ? (எ-று) அனந்தனை வென்னடை அன்மொழித் தொகை. (18)

**மானத் தரக்கரந் தைப்பட வீர்ந்துரி வாங்கினர்கற்**
**றனத் தரக்க ரரசுட்க வூன்றிய தாளர்குடப்**
**பானத் தரக்கர விந்தத்தின் மேற்றுயில் பண்ணைமறைக்**
**கானத் தரக்கர மைந்துணர் வீர்வினைக் கட்டறுமே.**

(இ-ள்.) மானத்தரக்கு அரந்தைப்பட ஈர்ந்து உரி வாங்கினர்-வலிய புலியானது துன்பப்படப் பிளந்து அதன் தோலினை ஆடையாகக் கொண்டவர், கல்தானத்து அரக்கர் அரசு உட்க ஊன்றியதாளர்-கைலைமலையினிடத்தே (இடுக்கிற்பட்டு) அரக்கருக்கு அரசனாகிய இராவணன் வருந்து மாறு பெருவிரலாலூன்றிய திருவடியையுடையார், குடப் பால நத்து அரக்கு அரவிந்தத்தின்மேல் துயில்பண்ணை மறைக்கானத்தர் - குடம்போன்ற வெண்மையான சங்கங்கள் சிவப்பாகிய தாமரைமலர் மேற்றுயிலுகின்ற வயல் சூழ்ந்த திருமறைக்காட்டீசர், அக்கரம் ஐந்து உணர்வீர் வினைக்கட்டு அறும் ஏ - அவரது பஞ்சாக்கரத்தினைச் சிந்திப்பீராக அதனாற்கன்மபந்தம் ஒழியும் - (எ-று) பிள, இழு என்னும் பொருட்குப் பொதுவாய ஈர் என்னும் பகுதி பிளந்து எனப்பொருள்படுங்கால் ஈர்ந்து எனவும் இழுத்து எனப்பொருள்படுங்கால் ஈர்த்து எனவும் வழங்கும். (19)

**அறுத்தவித் தாரச் சமைத்தபின் ளைக்குகந்த தரர்பொதியக்**
**குறுத்தவித் தார முனிக்கருள் கோலக் குழகரராப்**
**பொறுத்தவித் தாரணி யேத்தா ரணபுரம் போந்துகரு**
**வறுத்தவித் தாக்கும தல்லாது வேறு மருந்தில்லையே.**

(இ-ள்.) அறுத்து அவித்து ஆரச்சமைத்த பிள்ளைக்கு உகந்தார் - அரிந்து வேவவைத்து (ச்சுவை) நிரம்பப்பாகஞ் செய்த சிறுத்தொண்ட நாயனாருடைய பிள்ளைக்கறிக்கு விருப்பங்கொண்டவர், பொதியக் குறுத்த வித்தார

முனிக்கு அருள்கோலக்குழகர் - பொதியமலையில் வதிகின்ற வடிவிற்குறியராயினும் அறிவின் மிகப்பெரியராய அகத்திய மகா முனிவருக்குத் திருமணக் கோலத்தைக் காட்டியருளிய அழகர், அவரது, அராப்பொறுத்த இத்தாரணி ஏத்து ஆரணபுரம் போந்து - ஆதிசேடன் ருங்கும் இவ்வுலகம் துதிக்கப்பெற்ற திருமறைக்காடென்னும் திருப்பதியைச் சேர்தலால், கருவறுத்தவித்து ஆக்கும் - பிறவியை வறுத்த விதைபோல இனித்தோன்ருவண்ணம் ஆக்குமின், அது அல்லாது வேறு மருந்தில்லை ஏ - அவ்வாறு செய்வதன்றி அப்பிறவி நோய் தீர்த்தற்கு வேறு மருந்தில்லை— (எ-று) (20)

**மருக்கர வீரநின் னோதியைக் காரென்று மஞ்ஞையெல்லா**
**முருக்கர வீர வயில்விழி யாயநட முற்றனவைந்**
**திருக்கர வீரகத் திச்சேர கன்றந்தை சீர்மறைசை**
**யெருக்கர வீர மதிவேணி வெற்பி லெழிலியன்றே.**

(இ-ள்.) உருக்கு அரவீரஅயில்விழியாய் - உருக்கரத்தினையும் வீரம் பொருந்திய வேலையுமொத்த கண்ணினையுடையாய், மருக்கவீரம் நின்ஒதியைக்கார் என்று - வாசனை பொருந்திய அலரி மலரைச்சூடிய உனது கூந்தலை மேகமெனக்கருதி, மஞ்ஞை எல்லாம் நடமுற்றன - மயில்களெல்லாம் ஆடா நின்றன, ஐந்திருக்கர வீரகத்திச்சேதகன் தந்தை-ஐந்து திருக்கரங்களையுடைய வீரகத்திச்சேதக விநாயகரின் தந்தையாகிய, சீர் மறைசை எருக்கு அரவு ஈரமதி வேணி வெற்பில் - சிறப்பினையுடைய திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் எருக்க மலரினையும் பாம்பினையும் குளிர்ந்த சந்திரனையும் சடையிற்றரித்த சிவபெருமானது மலையினிடத்தே, எழிலி அன்று-ஆதலால் இது கார்ப்பருவம் அன்று— (எ-று) மலையினிடத்தே நடமுற்றனவெனக்கூட்டுக. எருக்கர வீரமதிவேணி அன்மொழித்தொகை, எழிலி ஆகுபெயர்.

இது காலம் மறைத்துரைத்தல். (21)

**அன்ருலி நாட்டந் துயின்ருே னிகரண்ண லேதிருமான்**
**பொன்ருலி நாட்டநஞ் சுண்டரர் மறைசெய் பொருப்பகத்தி**
**லொன்ருலி நாட்டவழ் கார்போலும் வார்குழ லொண்டொடி**
**குன்ருலி நாட்டவர் கொள்ளா ருனது குளிர்முத்தமே. [யூர்**

(இ-ள்.) அன்று ஆலின் நாட்டம்துயின்ருேன் நிகர் அண்ணலே - பூர்வத்தில் வடவாலிலையிற் கண்வளர்ந்த திருமாலையொத்ததலைவரே, திருமான் பொன்தாலி நாட்ட நஞ்சு உண்டார் - இலக்குமியினது பொற்ருலி அருது நிலைபெறும் வண்ணம் விடமுண்டருளிய சிவபிரானது, மறைசைப்பொருப்பகத்தில் - திருமறைக்காட்டு வரையினிடத்தே, ஆலி ஒன்று நாள் தவழ்கார்போலும் வார்குழல் ஒண்தொடி ஊர் குன்று ஆல் - மழையினைப்பொருந்திய (கார்) காலத்துத்தவழும் மேகம்போன்ற நீண்ட கூந்தலையும் ஒளிபொருந்திய வளையினையுடைய தலைவியினது ஊர்குறிஞ்சியாதலால், உனது குளிர்முத்தம் ஏஇ நாட்டவர்கொள்ளார்-கையுறையாகக்கொடுக்கும் உமது குளிர்ந்த முத்துமாலையை இந்த நாட்டார் அணியாகக்கொள்ளமாட்டார். — (எ-று) இது கையுறைமறுத்தல். (22)

**முத்திரு மாதங்க வார்முலைப் பாகர் முதுமறைசை**
**மெய்த்திரு மாதங்க மாற்கரி யாரை விளம்புகிலீர்**
**பத்திரு மாதங் கருவயி னூறிய பாழுடம்பை**
**வைத்திரு மாதங்கத் தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே.**

(இ-ள்) முத்து மாதங்கவார் இருமுலைப்பாகர்-முத்து வடத்தினையும் சிறந்த தங்கத்தானியன்ற கச்சினையுமணிந்த இரண்டு தனங்களையுடைய உமாதேவியாரைப் பாகத்திலுடையவராகிய, முதுமறைசைத் திருமாது அங்க

மாற்கு அரியாரை மெய்விளம்புகிலீர் - பழைய திருமறைக் காட்டிலெழுந்தருளியிருக்கின்ற இலக்குமியை மார்பினிடத்து வைத்துள்ளதிருமாலுக்குங் காண்டற்கரிய வீசரை உண்மையாகத்துதிக்கின்றீரில்லை, இரு பத்து மாதம் கருவயின் ஊறிய பாழ்உடம்பை வைத்திரும் - இரண்டு மாதம் பிதாவின் கருப்பத்திலும் பத்துமாதம் மாதாவின் கருப்பத்திலும் ஊறி உற்பவித்த பாழாகிய இவ்வுடம்பினை வைத்துக் கொண்டிருங்கள், ஆதங்கத் தென்றிசைக்கூற்று கடைக்கு ஏவரும்-கொல்லுதலாலே துன்பத்தைவிளைக்கும் தென்றிசைக்குரிய இயமன் இறுதிக் காலத்துவருவன். —(எ-று.) மாதங்கம் யானைக்கோடெனக் கொண்டு முலைக்குவமையாக்கினும் பொருந்தும். (23)

**வருகர நாக மகவான் பதமும் வனசப்பிரான்**
**பொருகர ஞகம் பிளந்தான் பதமும் புகலின்மிக்கோ**
**முருகர நாகர் பணிமா முகரத்தன் மூவர்தமிழ்க்**
**குருகர ஞக மருங்குழை யாற்பணி யொண்டவர்க்கே.**

(இ-ள்.) வருகரநாகமகவான்பதமும் - முன்னசைந்து வருகின்ற துதிக்கைபொருந்திய ஐராவதத்தையுடைய இந்திரனது பதமும், வனசப்பிரான் பொருகரன் ஆகம் பிளந்தான் பதமும் - தாமரைமலரில் வசிக்கும் பிரமனும் யுத்தஞ் செய்த கரனென்னு மரக்கனது மார்பைப் பிளந்த திருமாலும் ஆகிய இவர்களது பதங்களும், புகலின்மிக்கோ -சொல்லுமிடத்து உயர்ந்தனவாமோ, முருகர் அம்நாகர் பணிமாமுகர் அத்தன் - முருகக்கடவுளுக்கும் அழகிய தேவர்கள் பணியப்பெற்ற யானைமுகக்கடவுளுக்கும் பிதா, மூவர்தமிழ்க்கு உருகு அரன் - மூவர் சுவாமிகள் பாடிய தமிழ் வேதத்தின் பொருட்டுத் திருவுளங்களிக்கின்ற அரனர், அமரும்நாகுகுழையான் — செவியிற்றரிக்கும் சங்கக்குழையார், இச்சிவபெருமானை, பணி ஒண்தவர்க்கு ஏ-

பணிகின்ற ஒளிபொருந்திய தவத்தினையுடையார்க்கு (எ-று.) தவத்தினையுடையார்க் குயர்ந்தன வாமோ வெனக் கூட்டுக. மிக்கவோ என்பதின் அகரந்தொகுக்கப்பட்டு மிக்கோ வென்றாயிற்று. மூவர் தமிழாகிய தேவாரத்திரு மறைக்கும் தெய்வத்திருமறைக்கும் அபேதமாமாதலால் திருமறைக்காடனென்பார் ''மூவர்தமிழ்க் குருகரன்'' என்றார். ஆதலின் அந்தாதிச்செய்யுள்தோறும் தலப் பெயர் வரல்வேண்டும் என்ற நியமம் இதிற் றவறுதல் இல்லையென்றுணர்க. இந்நியமம் இல்லையென்போர் ஆன் றோர் கொள்கையும் அந்தாதியும் கலம்பகமுமாகிய பிர பந்தங்களுக்குத் தலப்பெயர் கூறுங்கருத்து முணராது விருத்தத்திற்கு ஐந்து அடி என்பதற்கு ஔவை செய்யுளை உதாரணங் காட்டுதல் போல நிரோட்டக யமகவந்தாதி யில் ஒரு செய்யுளை உதாரணமுங்காட்டியிடர்ப்படுவர். (24)

**ஒண்டூதை யுண்புற வீர்மறந் தாரெம தூரர்முன்னுண்**
**மண்டூதை யாக்கிய சோறீந் திடமகிழ்ந் தார்வரம்பி**
**னண்டூதை யால் வெயில் காய்மறைக் காட்டுறை நாகமணி**
**வண்டூதை யோதிக்குச் செம்பாதி யாதி மணிவரைக்கே.**

(இ-ள்.) ஒண் தூதை உண்புறவீர் - ஒள்ளிய பருக் கைக்கற்களையுண்ணும் புறாக்களே, முன்னுள் மண் தூதை ஆக்கிய சோறு ஈந்திட மகிழ்ந்தார் எமது ஊரர் மறந் தார்-முன்னாளிற் (சிற்றிலின்கண்) சிறிய கலத்திற்சமைத்த மணற்சோற்றினையும் யான் இடமகிழ்ந்துகொண்டவராகிய எமது மருத நிலத்தலைவர் (இந்நாளில் என்னை) மறந்தனர், வரம்பில் நண்டு ஊதையால் வெயில்காய் - கரைகளிலே நண்டுகள் குளிர்காற்றால் வெயில் காயப்பெறும், மறைக் காட்டு உறைநாகம் அணிவண்டூது ஐயோதிக்குச் செம்பாதி ஆதிமணிவரைக்குஏ - திருமறைக்காட்டி லெழுந்தருளிய

பாம்புகளையணிந்த, வண்டுகளொலிக்கும் அழகிய கூந்தலை யுடைய உமாதேவியாருக்குச் செம்பாதியாகிய திருமேனி யையுடைய முதல்வரது மலைக்கண் — (எ-று) மலைக்கண் மறந்தாரெனக் கூட்டுக. நாகமணி என்பதற்குப் புன்னைமல ரை யாதல் சடைநாகமென்னும் அணியையாதல் அணிந்த எனப் பொருள்கொண்டு ஓதிக்கு அடையாக்கினுமாம். ஐயோதி - ஐம்பாலாகிய கூந்தலெனினும் பொருந்தும். குழல், முடி, கொண்டை, பனிச்சை, சுருள் இவற்றை ஐம் பாலென்பர். ஐயோதி அன்மொழித்தொகை. இது புற வொடுபுலம்பல். (25)

**மணிக்குட நாடகன் மாறன் பதாகை வரித்தநுதற்**
**கணிக்குட னுடக வாழுமென் ருலிம்மை காயுமையற்**
**பிணிக்குட னுடகப் பொற்கொன்றை வாங்கும் பெருமறைசை**
**யணிக்குட நாடக மால்பணி யாதி யரனிடத்தே.**

(இ-ள்.) மணிக்குடநாடகன் மாறன்பதாகை வரித்த நுதற்கணிக்கு - அழகிய குடநாட்டகத்து வாழுஞ் சேரனுக் கும் பாண்டியனுக்கும் கொடிகளாயுள்ள வில்லையுங்கயலை யும் (முறையே) அமைத்தாற்போன்ற நெற்றியையுங் கண்ணையுமுடைய தலைவிக்கு, உடல்நாள் தகவாழும் என் ருல் - சரீரம் நெடுநாள் உயிரோடு வாழவேண்டுமாஞல், இம்மைகாயு மையற்பிணிக்கு - இவ்வாட்டியை யறுக்கப் புகும் மயக்கநோய் தீர்தற்கு, உடன் ஆடகப்பொற் கொன் றை வாங்கும் - தாமதியாது பொன்போலு மழகிய கொன் றைப் பூமாலையை வாங்கி வருவீராக. (ஆட்டியையறுத்தல் வேண்டாம்), பெருமறைசை அணிக்குட நாடகமால் பணி ஆதி அரனிடத்தே - பெரிய திருமறைக்காட்டிலே அழகிய குடக்கூத்தினைச் செய்கின்ற திருமால் பணியுமாதியாகிய அரனிடத்தே - (எ-று) அரனிடத்தே வாங்கி வருவீராக வெனக்கூட்டுக, இது வெறிவிலக்கல். நுதலையுங்கண்ணை

யுமுடையாளுக்குக் காயம் தினமேற வாழுமாஞல் இத் தகரை வெட்டுதிர்; மயக்கநோய் போதலுக்காஞல் கொன் ஞற மாலையை வாங்குமின் (மறியறுக்க வேண்டாம்) எனப் பொருளுரைத்து வெறிவிலக்கி மாலை வாங்குதல் எனக் கருத்துக் கூறுவாருமுளர். காயம் தினமேறவாழுதலே தாய்தந்தையர் முதலியோர் கருத்தாமாதலின் அதன் பொருட்டுத் தகரை வெட்டா தொழிவரல்ல ராதலின் வெறிவிலக்காகாமையின் அவ்வுரை பொருந்தாமை யுணர்க. (26)

**இடங்கர டக்கய மேனின்று கூப்பிட் டிரங்குமந்தத்**
**தடங்கர டக்கயங் காத்தோன் சரமனைத் தையல்கன்ம**
**கடங்கர டக்கய மேருகு நான்மறைக் கான்புவனி**
**விடங்கர டக்கய நீர்போ லெனைமுத்தி மேல்வைப்பரே.**

(இ-ள்.) இடங்கர் அடக்கயமேல் நின்று கூப்பிட்டு - முதலையானது பிடித்துவருத்தத் தடாகக் கரைமேல் நின்று அழைத்து, இரங்கும் அந்தக்கரடத்தடங் கயம்காத் தோன் - வருந்திய அந்த மதத்தினையுடைய பெரிய கஜேந் திரனென்னும் யானையைக் காத்த திருமால், சரம் - பாண மும், கன்மகள் மனைத்தையல் - மலைமகள் இல்லக்கிழத்தி யும், ஏறு தம்கரடக்கயம் - இடபம் தமதுகையிற் பிடிக்குங் கொடியும், ஆகும் - ஆகப்பெற்ற, நான்மறைக்கான் புவனி விடங்கர் - நான்கு வேதங்களாலும் பூசிக்கப்பெற்ற திரு மறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற புவனிவிடங்கர், அயம் அடக்கும் நீர்போல் எனை முத்திமேல் வைப்பர் ஏ - காய்ச்சிய இரும்பானது அடக்கும் நீர்த்துளிபோல் என்னை முத்தியில் ( இரண்டறக்கலக்குமாறு ) வைத்தருளுவர்— (எ-று) புவனிவிடங்கர் - பூமியில் சத்தவிடங்கராயுள் ளார். (27)

**மேல்விண்டு நாயக வில்லார் மறைசை விமலரிடப்**
**பால்விண்டு வேதன் வலப்பாலு மாகப் படைத்தவர்வா**
**யால்விண்டு நூனிரை சுற்றுஞ் சிலம்பிக் கரசளித்த**
**போல்விண்டு முத்தருங் கொள்வரென் னூற்கவிப் புன்சொல்லு**
**[மே.**

*(இ-ள்.) மேல் நாயகவிண்டுவில்லார் - மேலாகிய தலைமையையுடைய மேருமலையை வில்லாகவுடையார், மறைசை விமலர் - திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற நிருமலர், இடப்பால்விண்டு வலப்பால் வேதனுமாகப்படைத்தவர் - இடப்புறத்தே திருமாலும் வலப்புறத்தே பிரமனுந் தோன்றும்படி சிருட்டித்தருளியவர், விண்டு முத்தரும் - மூங்கிலினிடத்துப் பிறந்த மூத்தாயுள்ளார், இவரும், வாயால் நூல்விண்டு நிரைசுற்றும் சிலம்பிக்கு அரசு அளித்தபோல் - வாயால் நூலினை நூற்று (த்தமக்கு ஆலயமாமாறு) வரிசையாக அதனைச் சுற்றிப்பணிபுரிந்த சிலம்பிப்பூச்சிக்கு அப்பணியினையேற்று அரசளித்ததுபோல, என் நூற்கவிப்புன் சொல்லுங் கொள்வர் - என்னூற்செய்யுட் புன்சொல்லினையும் ஏற்றவராய் என்னை அளித்தருளுவர் - (எ-று) கொள் என்னும் பொருள் வினை உவமையினும் அளியென்னும் உவமவினை பொருளினும் சென்றியையும். முத்தரும் என்பதில் உம்மை சிறப்பு; சாரியையெனினுமாம். ச-ம் அடியில் "முத்தருமெற்கு மருள்வரிப்புன் சொற்கொண்டே" எனப் பாடங்கொள்வாருமுளர். (28)*

**புன்னக வேலி மறைக்கா டரன்பரைப் புண்டரிக**
**மின்னக மாயவ னுன்முகன் வாசவன் மேற்பதத்தின்**
**மன்னக வைப்பவர் காடோ டுமாடு மகிழ்ந்துபுன்றேல்**
**பன்னக நஞ்சுடை பூணா ணதரகப் படைத்தவரே.**

( இ-ள். ) புன்னுகவேலி மறைக்காடர் - புன்னுக விருட்சங்கள் சூழப்பெற்ற திருமறைக்காட்டினையுடையார், அன்பரைப் புண்டரிகமின் ஆகம் மாயவன் நான்முகன் வாசவன் மேற்பதத்தின் மன் ஆகவைப்பவர்-தமது அடியாரைத் தாமரைமலரிலிருக்கும் இலக்குமியை மார்பிலணிந்த திருமாலும் பிரமனும் இந்திரனும் ஆகிய இவர்களது மேலாகிய பதத்திற்கும் தலைவராகவைத்தருளுகின்றவர், காடுஓடு மாடு மகிழ்ந்து - (ஆயினும் தாம்) சுடுகாட்டினையும் ஓட்டினையும் மாட்டினையும் (இடமாகவும், பாத்திரமாகவும் வாகனமாகவும்) மகிழ்ந்து கொண்டருளி, புன்தோல் உடைபல் நாகம் பூண் நஞ்சு ஊண் அது ஆகப்படைத்தவர் ஏ-புல்லிய தோலினை உடையாகவும் விடப்பல்லினையுடைய நாகத்தைப் பூணுகவும் நஞ்சை உணவாகவும் பெற்றவர் ஆவர் — ( எ-று. ) ஊண து என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (29)

**படைக்கந் தரத்தர் திருமறைக் காடர் பனிவரைமே**

**லடைக்கந் தரத்த நிறத்தா மரைமுகத் தன்னமன்னுள்**

**தொடைக்கந் தரத்த மருஞ்சுரு ளோதிச் சுரும்பினங்கா**

**ளிடைக்கந் தரம்வரி னுங்களுக் கேபழி யேந்திடுமே.**

( இ-ள்.) படைக்கந்தர் அத்தர் திருமறைக்காடர் பனிவரைமேல் - வேற்படையினையுடைய முருகக்கடவுளுக்குப் பிதாவாகிய திருமறைக்காட்டீசரது குளிர்ச்சிபொருந்திய மலையினிடத்தே, அடைக் கந்த ரத்த நிறத்தாமரை முகத்து அன்னமன்னுள் - இலைகள் பொருந்திய வாசனையும் சிவப்பாகிய நிறமும் உடைய தாமரைமலர்போலும் முகத்தினையும் அன்னம்போலு நடையினையுமுடைய தலைவியின், தொடைக்கந் தரத்து அமருஞ்சுருள் ஓதிச்சுரும்பு இனங்காள் - மாலைசூடிய மேகத்தையொத்த சுருண்ட

கூந்தலினிடத்துப் பொருந்திய வண்டின் கூட்டங்களே, இடைக்கு அந்தரம்வரின் உங்களுக்கே பழி ஏற்றிடும் ஏ- இடைக்கு முடிவுவருமாயின் உங்களுக்கே பழிசுமத்தப்படும். (எ-று.) ஏற்றிடுமென்பதிற் படு வினைத்தொகை. தாமரை, மலருக்காதலால் முதலாகு பெயர். அடை என்பதனை இயற்பெயர்ப்பொருளுக்கும், கந்தரத்த நிறம் என்பதனை ஆகுபெயர்ப் பொருளுக்கும், விசேடண மாக்குக; தாமரையும் மலரும் முதலுஞ் சினையுமாய் ஒரு பொருளாமாதலின் அடைகளை எல்லாம் தாமரையாகிய முதலுக்கே ஆக்கினும் அமையும் "அடைக்கந்த" என்பதற்குகந்த மடைதலையுடைய எனப்பொருள் கொள்ளிற்கந்த மென்னும் எழுவாயில் மகரங்கெடுதற்கு விதியின்மையின் அது பெருந்தாமையுணர்க. (30)

**ஏற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப்**
**பேற்றுக் கொடியத்தர் திக்காடை நாதரைப் பேணிக்கொண்**
**கூற்றுக் கொடியற்கு மஞ்சே னினியிக் குவலயத்தே [டேன்**
**தோற்றுக் கொடிவரை கேதன மாதுந் தொலைந்தனளே.**

(இ-ள்.) ஏற்றுக்கொடியர் - இடபக் கொடியினையுடையார், திருமறைக்கானத்தர் - திருமறைக்காட்டீசர், ஏழ் உலகப் பெற்றுக்கொடி அத்தர் - ஏழுலகங்களையும் பெற்றருளிய உமாதேவியாரைப் பாதித் திருமேனியிலுடையார், திக்கு ஆடைநாதரைப் பேணிக்கொண்டேன் - திக்காகிய வஸ்திரத்தையுடைய முதல்வராயுள்ளார், இவரை, விரும்பிவழிபடப் பெற்றேனாதலால், கூற்றுக்கொடியற்கும் இனி இக்குவலயத்தே அஞ்சேன் - இயமனாகிய கொடியவனுக்கும் இனி இப்பூமியில் அஞ்சுகின்றிலேன், தோற்றுக் கொடிவரை கேதனமாதும் தொலைந்தனள் ஏ- தோல்வியுற்றுக் காகவடிவம் எழுதப்பெற்ற கொடியினையுடைய மூதேவியும் என்னைவிட்டு நீங்கினள் (எ-று. (31)

**தொலைவே தனையர் கருக்குழி வாய்ப்படுந் தெல்லைச்சென்ம**
**நிலைவே தனையென் றுழலூசல் போல நினையுநெஞ்சி**
**னுலைவே தநைய வொருகா லஞ்சேலென் றுரைக்கிலென்னுங்**
**கலைவே தனையன் பணிமறைக் காடவென் கண்முனின்றே**

(இ-ள்.) அனையர் கருக்குழிவாய்ப்படும் தொல்லைச் சென்ம நிலை வேதனை தொலைவு ஏது என்று - அன்னையரது கருப்பக்குழியிலே உண்டாகியுண்டாகி வருகிற பழைய பிறவியினது நிலைமையாகிய துன்பத்திற்கு முடிவில்லை என்று, உழல் ஊசல்போல நினையும் நெஞ்சின் - ஆடுகின்ற ஊசலைப்போலுஞ் சலனமுற்றெண்ணுகிற மனத்தினது, உலைவு ஏதம் நைய ஒருகால் அஞ்சேல் என்று உரைக்கின் என்னும் - சஞ்சலமும் துன்பமும் தீர ஒரு முறையேனும் நீ யஞ்சற்கவென்று சொல்லியருள்வீராயின் அதனுலுமக்குக்குறை எதுவோ, கலைவேதன் ஐயன்பணிமறைக்காட என்கண்முன் நின்று ஏ - வேதங்களையுணர்ந்த பிரமனும் அவன் பிதாவாகிய திருமாலும் வணங்கப்பெற்ற திருமறைக் காட்டீசரே என் கண்ணெதிரே நின்று—(எ-று.) நின்று சொல்லியருள்வீராயின் எனக்கூட்டுக. ஏது என்பது இன்மை குறித்து நின்றது. (32)

**கண்ணச்சி ராக வரிசூழுங் காமறைக் காடர்செந்தீ**
**வண்ணச்சி ராசல மேருவில் லாளி வரைவிடுதே**
**ருண்ணச்சி ராக விழிக்கால வேலுறை விட்டுவிட்டுப்**
**பெண்ணச்சி ராள்வல வாவிறங் காது பிடியன்னமே**

(இ-ள்.) கள்நச்சு இராகவரிசூழுங் காமரைக்காடர் தேனை விரும்புகின்ற இசைபாடும் வண்டுகள் சூழப் பெற்ற சோலைகளையுடைய திருமறைக்காட்டீசர், செந்தீ வண்ண சிரமேரு அசலவில் - மேருமலையாகிய வில்லையுடை

யார், வரை தேர்விடு - இவரது மலையினிடத்தே (விரைந்து) தேரினைவிடுவாயாக, உண்நச்சகாலவேல் இராக விழிஉறை விட்டுவிட்டு - மையுண்ட, விடத்தினையும் இயமனது வேலினையுமொத்துச் சிவப்பாகிய கண்களின்று நீர்த்துளிகளைச் சிந்திச் சிந்தி, பிடிஅன்னம் இறங்காது பெண் அச்சு இராள்வலவ -ஒரு பிடி அன்னமும் இறக்க மில்லாமல் தலைவி உடலொடு கூடிவாழாள், தேர்ப்பானே — (எ-று) அன்னமும் என்பதில் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. (33)

**அன்னம் பலவ நறும்புன்னைச் சேக்கை யமர்மறைசை**

**முன்னம் பலவன் முடித்த சடாதர மூர்த்திதில்லைப்**

**பொன்னம் பலவன் பிநாகிகங் காளன் புராந்தகன்சீர்**

**வன்னம் பலவன் பசுபதி நாதனென் வான்றுணையே.**

(இ-ள்.) அன்னம் புன்னைநறும் பல்லவச்சேக்கை அமர்மறைசைமுன் - அன்னப்புட்கள் புன்னைமரத்தினது நறுந்தளிராலாய சயனத்திற்றுயிலுந் திருமறைக்காட்டு முதல்வர், அம்பு அலவன்முடித்த சடாதரமூர்த்தி - கங்கையினையுஞ்சந்திரனையுந்தரித்த சடையினையுடைய மூர்த்தியாயுள்ளார், தில்லைப்பொன்னம்பலவன் - சிதம்பரத்திலே கனகசபையையுடையார், பிநாகி - பிநாகமென்னும் வில்லையுடையார், கங்காளன் - முழுவெலும்புடையார், புராந்தகன் - முப்புரங்களைத்தகித்தவர், சீர்வன்னம்பலவன் - சிறந்த பல நிறங்களையுடையார், பசுபதி - ஆன்மாக்களுக்குப் பதியாயுள்ளார். நாதன் - இறைவர், என்வான்றுணையே - இவர் எனக்குப் பெரியதுணையாவார் — (எ-று.) முதலடியிற் பல்லவமெனற்பாலது பலவமென விடைகுறைந்து நின்றது. (34)

**வானப் பிறையையும் வாடைப் புலியையு மையல்செய்யுந்**
**தேனப் பிறையையுந் தென்றலை யுங்கண்டு சில்லரிக்கண்**
**மீனப் பிறைக்கு மடமானை மேவிலர் வேடனிடு**
**மூனப் பிறைச்சிக் குகந்தார் மறைசை யுகந்தவரே.**

(இ-ள்.) வானப்பிறையையும் - வானத்திற்றோன்றும் பிறைமதியையும், வாடைப்புலியையும் - வாடைக் காற்றாகிய புலியையும், மையல்செய்யுந் தேன் அப்பு இறையையும் - மயக்கத்தைச்செய்கின்ற தேன் பொருந்திய மலராகிய அம்பினையுடைய மன்மதனையும், கண்டு சில்லரிமீன் கண் அப்பு இறைக்கும் மடமானை மேவிலர் - கண்டு சில வரிகள் பொருந்திய மீன் போன்ற கண்ணினின்றும் நீரைச் சொரிகின்ற இளமான்போன்ற எனது பெண்ணை அணைந்தனரில்லை, வேடன் இடும் ஊன் அப்பு இறைச்சிக்குஉகந்தார்- வேடராகிய கண்ணப்பநாயனரிட்ட ஊன் அப்பிய இறைச்சிக்கு விருப்பங் கொண்டவராகிய, மறைசை உகந்தவரே - திருமறைக்காட்டில் மகிழ்ந்து வீற்றிருக்கும் சிவபிரான்— (எ-று.) நற்றாயிரங்கல், தேனப்பு வலித்தல் விகாரம் (35)

**உகந்தா வடிக்கு மிடையர்தம் பாலனை யுண்டுகடற்**
**சகந்தா வடியனுக் கெட்டாத ஞானத் தலத்துமுத்திச்**
**சுகந்தா வடிதமிழ் நான்மறைக் காட துணைவரியம்**
**பகந்தா வடிசெல் குழையாண் மருவிய பாகத்தானே.**

(இ-ள்.) உகந்து ஆ அடிக்கும் இடையர்தம் பால் அளை உண்டு - களிப்போடு பசுக்களை யடித்தோட்டு மிடையர்களிடத்துப் பாலினையுந் தயிரினையு முண்டு, கடல் சகந்தாவு அடியனுக்கு எட்டாத-கடல் சூழ்ந்த உலக முழுவதுந் தாவி யளந்த பாதத்தினையுடைய திருமாலுக்கு மறிதற்கரிய, ஞானத்தலத்து முத்திச்சுகந்தா - ஞானபூமிக்கண் விளங்கும் முத்தியின்பத்தைத்தந்தருளும், வடி தமிழ் நான் மறைக்காட - ஆராயப்பட்ட முத்தமிழ் வழங்கும் நான்கு

வேதங்களும் பூசித்த திருமறைக்காட்டீசரே, துணைவரி அம்பகம் தாவடிசெல் குழையாள் மருவியபாகத்தான் ஏ - இரண்டாகிய வரிபொருந்திய கண்கள் போர்க்குச் செல்லப் பெற்ற காதினையுடைய உமாதேவியார் பொருந்திய பாகத்தினை உடையவரோ—(எ-று) (36)

**பாக னகனி மொழியா யுனது பனிமுகமாங்**
**கோக னகநி லவுந்துணைப் பானலிற் கோடல்கண்டே**
**நாக நகநி மிரும்புலிப் பாதரு நாடவன்று**
**மாக னகநிலை மன்றுடி வேத வனமலைக்கே.**

(இ-ள்) பாகு அன கனி மொழியாய் - தேன் பாகை யொத்த கனிந்தசொல்லினையுடையாய், உனது பனி முகமாம் கோகனகம் நிலவுந்துணைப் பானலிற் கோடல்கண்டேன் - உனது குளிர்ந்த முகமாகிய தாமரைமலரில் விளங்காநின்ற இரண்டு நீலோற்பலமலரின்மீது காந்தண் மலரு மலரக்கண்டேன், நாக(ப்பாதர்) நகநிமிரும் புலிப்பாதரும் நாட-பதஞ்சலி முனிவரும் நகம் நிமிரும் வியாக்கிரபாத முனிவரும் தரிசனம் பண்ணும்படி, அன்று மா கனக நிலை மன்றுடி வேதவனமலைக்கே - அந்நாளிலே பெரிய பொன்னு லாகிய நிலைபெற்ற அம்பலத்தினிடத்தே ஆடியருளிய சிவபிரானது திருமறைக்காட்டு மலையினிடத்தே— (எ-று.) பானல் - கண்கள். கோடல் - கை. நகையொளியும் வெள் வளையொளியும் பரவிய கையைக்கோடல் (வெண்காந்தள்) என்னப்பட்டது. துணைப்பானலிற் கோடல் என்பது உருவக உயர்வு நவிற்சியணி—இஃது நாணிக்கண் புதைத்தல் (37)

**மலைக்கார் முகந்தர யாழைப் பழிமொழி மான்குறையா**
**நிலைக்கார் முகமதி யாள்பங் கனேநிறை காய்கந்திச்சூ**
**ழலைக்கார் முகந்திடும் வேதா ரணிய வருந்துயரந்**
**தொலைக்கார் முகந்தமி யேன்சொல்லு வேனென்ன சொன்னதிலே**

(இ-ள்.) மலைக்கார்முகம் - மேருமலையாகிய வில்லையும், தரயாழைப் பழிமொழிமான் குறையாம்நிலைக் கார்முகமதியாள் - மேலாகிய யாழின் இசையைப்பழிக்கும் மொழி பொருந்திய களங்கம் குறையாகிய நிலைமையையுடைய பெருமை பொருந்திய முகமாகிய மதியினையுடைய உமாதேவியாரையும், பங்கனே - (இடப்) பாதித் திருமேனியிலுடையவரே, காய்நிறைகந்திச் சூழலைக்கார் முகந்திடும் வேதாரணிய - காய்கணிறைந்த கமுகஞ்சோலையை மேகம் முகக்கப்பெற்ற திருமறைக்காட்டீசரே, அருந்துயரந்தொலைக்க ஆர்முகம்தமியேன் சொல்லுவேன் சொன்னதில் என்ன ஏ - எனது அரிய துக்கங்களைப் போக்கும்வண்ணம் யுார்மாட்டுத்துணையற்ற யான்சொல்லுவேன் ? அப்படிச்சொல்வதினும் பிரயோசனம் யாது ? (எ-று) சந்திரனிடத்துள்ள களங்கத்தை மான் என்றும் முயல் என்றும் உலகோர் கூறுவர், முகத்தல் மணத்தல், மோத்தல். தொலைக்கவென்பதில் அகரம் தொகுக்கப்பட்டது. முகம் ஏழனுருபு. " மலைக்கார்முகதர " எனப்பாடமாயின் மலையினை வில்லாகக் கொண்டவரே, எனப் பொருள் கொள்க. கார்முகந்தர என்பது வடமொழிச்சந்தியன்று. ஆதலின் இப்பாடத்திற்கு அப்பொருள் பொருந்தாமையுணர்க. (38)

**சொன்னச் சிலம்பு குழைத்த வில்லான் சுருதிப்பதியான்**
**வன்னச் சிலம்பிக் கரசளித்தான் வெற்பின் மாணிழைகண்**
**மின்னச் சிலம்பு கலைநணையரமன் மெய் வேர்வரும்பச்**
**சின்னச் சிலம்படி யாய்குடைந்தா யொரு தேன்சுனையே.**

(இ-ள்) சொன்னச்சிலம்பு குழைத்தவில்லான் - பொன்மயமாகிய மேருமலையைவளைத்த வில்லாக உடையார், சுருதிப்பதியான் - திருமறைக் காட்டினையுடையார், வன்னச்சிலம்பிக்கு அரசளித்தான் - அழகிய சிலம்பிப்பூச்

சிக்கு அரசினைக் கொடுத்தருளியவர், வெற்பின் - இவரது மலையினிடத்தே, மாண் இழைகள் மின்னச் சிலம்புகலை நனையாமல் மெய்வேர்வு அரும்ப - சிறந்த ஆபரணங்கள் (நன்கு இட்டு) விளங்கவும் ஒலிக்கின்றகலைகள் நனையாதிருக்கவும் உடலினிடத்தே வியர்வு தோன்றவும், சிலம்பு சின்ன அடியாய் - சிலம்பினைத்தரித்த சிற்றடியினையுடையாய், ஒருதேன் சுனைகுடைந்தாய் - ஒருதேன் சுனையிலே நீ நீர் விளையாடலைச் செய்தாய் - (எ-று) இது மிகவும் வியக்கத் தக்கதென்பது எஞ்சி நின்றது. இஃது தோழிசுனையாடல் கூறிநகைத்தல். (39)

**தேன்றதும் பிக்குளிர் தாமரைப் பீடிகைச் செல்வனும்வாய்**
**நான்றதும் பிக்கருண் மாயனும் வான்புவி நண்ணியதுங்**
**கீன்றதும் பித்தவ ராற்கிட்டு மோகிடை யாவுலக**
**மீன்றதும் பிக்குழல் சேர்மறைக் காட னிரண்டையுமே:**

(இ-ள்) தேன்ததும்பிக் குளிர்தாமரைப் பீடிகைச் செல்வனும் - தேன்வழிந்து குளிரப்பெற்ற தாமரை மலராகிய வாகனத்தையுடைய பிரமனும், வாய்நான்ற தும்பிக் கருள்மாயனும் - வாயானது தொங்குகின்ற யானைக்கு அருள்செய்து காத்தவனாகிய திருமாலும், வான் நண்ணிய தும்புவிகீன்றதும்பித்து - முறையே (அன்ன வடிவமாய் முடியைக்காண) வானத்திற் பறந்ததும் (வராகவடிவமாய் அடியைக்காணப்) பூமியைப் பிளந்ததும் பைத்தியமேயாம், அவரால் கிட்டுமோ கிடையா - அவர்களாற்கிட்டப்படுமோ ? (அவர்கட்குக்) கிடைக்கமாட்டா, உலகம் ஈன்றதும் பிக் குழல்சேர் மறைக்காடன் இரண்டையும் ஏ - உலகத்தைப் பெற்றருளிய வண்டுகள் பொருந்திய கூந்தலையுடைய உமாதேவியாரைப் பாகத்திலுடைய திருமறைக் காட்டீசரது அடியுமுடியுமாகிய அவ்விரண்டும் — (எ-று.) கிட்டுமோ வென்பதிற் படுசொற்றொகை. இரண்டையும் என்பதில் ஐ சாரியை இரண்டும் கிட்டுமோ கிடையா வெனக்கூட்டுக. (40)

இரண்டந்தகர ங்கிருந்தன்ன பார்வை யிணைச் சுரும்பர்
புரண்டந்தகர மருவிய கோதையைப் பொன்னில் வைத்தார்
முரண்டந்தகர வைவேலா கடற்றிரை முத்தச் சங்கங்
குரண்டந்தகர வெறிமறைக் காடன் குளிர் கிரிக்கே.

(இ-ள்.) இரண்டு அந்தகர் அங்கு இருந்தன்ன - இரண்டு கூற்றுவர் அங்கிருந்தாற்போலும் விளங்குங்கண்களையும், இணைச்சுரும்பர் புரண்டு அம்தகரம் மருவிய கோதையை - இணைந்த வண்டுகள் புரளப்பெற்று அழகிய மயிர்ச்சாந்தும் பூசிய கூந்தலையும் உடைய தலைவியை, பொன் இல்வைத்தார் - அழகிய இல்லினிடத்தே (காவலிற்) செறித்தனர், முரண் தந்த கர வை வேலா - வலிபொருந்திய கையின் கண்கூரிய வேலையுடைய தலைவரே, கடல் திரை முத்தச் சங்கம் குரண்டம் தகர எறிமறைக்காடன் குளிர்கிரிக்கே - கடலினது அலையானது முத்துக்களையுடைய சங்குகளை (த்தன்கண்ணுள்ள மீனைக் கவரவிருக்கும்) கொக்குகள் சிதையும்படி வீசுந் திருமறைக்காட்டையுடைய சிவபெருமானது குளிர்ச்சி பொருந்திய வரையினிடத்தே - (எ-று.) வரையினிடத்தே இற்செறித்தாரென முடிக்க, கிரிக்கு உருபுமயக்கம். இஃது இற்செறிவுறுத்து வரைவுகடாதல். (41)

கிரிதார கையணிந் தாலென்ன முத்தங் கிடந்த கொங்கை
அரிதார மன்னவ ளம்பகங் காட்டு மருக்கன் மதி
யெரிதார வெற்பு விழியாசனத்த னெழின் மறைசை
விரிதார கப்பொரு ளானேறு கந்தவன் மெய்யொளியே.

(இ-ள்.) கிரிதாரகை அணிந்தால் என்ன - மலையானது நட்சத்திர மாலையைத் தரித்தாற்போல, முத்தங்கிடந்தகொங்கை அரிதாரம் அன்னவள் - முத்துவடங்களணியப்பெற்ற முலையினையுடைய இலக்குமியை யொத்த தலைவியினது, அம்பகம் காட்டும் -கண்ணனது (சிவப்புற்றுக்)

காட்டுகின்றது, அருக்கன்மதிளரி விழிதார வெற்பு ஆசனத்தன் - சூரியனையும் சந்திரனையும் அக்கினியையும் விழியாகவும் வெள்ளி மலையில் எழுந்தருளியிருக்கும் தானமாகவும் உடையவரும், எழில்மறைசை விரிதாரகப் பொருள் - அழகிய திருமறைக்காட்டில் வியாபகமாகிய பிரணவப்பொருளாக வுள்ளவரும், ஆனேறு உகந்தவன் இடபவாகனத்தை விரும்பிச்செலுத்தி யருள்பவருமாகிய சிவபிரானது, மெய் ஒளி ஏ - திருமேனியின் ஒளியை — (எ-று.) மெய்யொளியைக் காட்டும் எனக்கூட்டுக. இஃது குறிப்பறிந்து புலந்தமைகூறல் (42)

மெய்த்து த்தியான பணியா பரணன் விரைமருவுங்
கொத்துத் தியானஞ் செறிமறைக் காட்டுறை கோனையெண்ணி
பொய்த்து த்தியான ம்புறு செருக்கற்றுப் புலனடங்க
வைத்து த்தியான சமாதி செய்வார்க்கில்லை வன்பிறப்பே.

(இ-ள்.) மெய்த்துத்தி ஆனபணி ஆபரணன்-தமது திருமேனியில் படப்பொறிகளையுடையதான பாம்பினை ஆபரணமாக உடையவராகிய, விரைமருவும் கொத்து உத்தியானஞ்செறி மறைக்காட்டுறைகோனை எண்ணி - வாசனை பொருந்திய பூங்கொத்தினையுடைய சோலைநெருங்கிய திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற இறைவரைச் சிந்தித்து, பொய்த்து உத்தியால் நம்புறு செருக்கு அற்று - பொய்ம்மையுடைத்தாய உத்தியினாலே நம்புகின்ற மதத்தினை நீங்கப்பெற்று, புலன் அடங்கவைத்துத் தியானம் சமாதி செய்வார்க்கு வன்பிறப்பு ஏ இல்லை - இந்திரியங்களை அடங்கச் செய்து தியானமும் சமாதியும் செய்கின்றவர்களுக்கு வலியபிறப்பு இல்லையாகும்— (எ-று.)

வன்போதக வல்லிய நெடுங்கான் சென்று மார்புடம்பி
னென்போதக வல்லிய ன்மாதவம் புரிந்தேனி னைப்பீர்
பொன்போதக வல்லிய ன்பார் சுருதி புரத்தபத்த
ரன்போதக வல்லியங் கொன்றையா யென்றறைந் திடுமே.

(இ-ள்.) வன்போதகவல்லிய நெடுங்கான் சென்று- வலிய யானையும் புலியும் உள்ள நெடிய காட்டினிடத்தே போய், மார்பு உடம்பின் என்பு ஓதக வல்இயல் மாதவம் புரிந்து ஏன் இளைப்பீர் - மார்பிலும் உடம்பிலுமுள்ள எலும்பு (தசை) ஒழியும் வண்ணம் கடியவியல்பினையுடைய பெரிய தவத்தினைச் செய்து ஏன் இளைக்கின்றீர்கள், பொன் போதக வல்லி அன்பு ஆர்சுருதிபுரத்த - இலக்குமியும் ஞானத்தையுடைய சரசுவதியும் அன்போடு பொருந்திய திருமறைக்காடரே, பத்தர் அன்பு ஓது அக அல்லி அம் கொன்றையாய் என்று அறைந்திடும்ஏ - பத்தர்கள் அல் பாற்றுதிக்கப்பெற்ற அகவிதழ்களையுடைய கொன்றைப் பூமாலையைத் தரித்தவரே என்று சொல்லித்துதியுங்கள்- (எ-று.) அங்ஙனம் துதித்தலே யெல்லாத்தவப்பயனையும் கொடுக்கும் என்பது எஞ்சிநின்றது. ஓதக - என்பதில் ஒருவு என்னும் பகுதி ஒவு எனத்திரிந்து பின் வகர உகரமும் கெட்டு ஓ பகுதி. தக துணைவினை; மேதக புகுதக என்றாற் போலும். (44)

**அறைக்கண் டவழகு விக்கிரி வேத வனத்தண்ணினே**
**மறைக்கண் டரிய பிரானிறந் தாரைப்பொன் மானத்துய்த்துப்**
**பிறைக்கண்ட வேணியிற் பாணியும் பாணியிற் பேர்மழுவுங்**
**கறைக்கண்ட முந்தரச் செல்லுதல் பார்த்தி கருங்குழலே.**

(இ-ள்) அறைக்கண் அருவி தவள் கிரி வேத வனத்து அண்ணினேம் - கற்பாறையில் அருவியோடுகின்ற மலைகள் சூழும் திருமறைக்காட்டினை யாம் வந்து அடுத்தோம், மறைக்கு அண்டரிய பிரான் இறந்தாரைபொன் மானத்து உய்த்து - வேதத்திற்கு எட்டுதற்கரிய சிவபெருமான் இத் தலத்து இறந்தவரைச் சுவர்ணவிமானத்து ஏற்றி, வேணி யிற் பிறைக்கண்டம் பாணியும் - சடையிலே பிறைத்துண் டத்தையும் கங்கையையும், பாணியிற் பேர்மழுவும் - கை யிலே ஆடுகின்ற மழுவையும், கண்டம் கறையும் - கண்டத்

திலே விடக்கறையையும், தர - தந்தருள (ச்சாரூபம் பெறச்) செல்லுதல் கருங்குழலேபார்த்தி - (அவ்விமானத்து) செல்லுதலைத் கறுத்த கூந்தலையுடைய பெண்ணே காண்பாயாக- (எ-று) செயவென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகிய தரவென்பது இறந்தகாலம் குறித்து நின்றது. இது பதியணித்தென்றல் (45)

கருமந்திரிகரணம் வேறுமாறுங் கயவர்ப்பற்றித்
தருமந்திரியு மெனையாள்வையோவெற்றித் தானவர்தம்
பெருமந்திரியை யுதரத்தில்வைத்த பிரானளகை
யொருமந்திரிநண்ப னேமறைக்காட்டுறை யுத்தமனே.

(இ-ள்) கருமம் திரிகரணம் வேறுமாறும் கயவர்ப் பற்றி- செயல் வேறாகவும் மனவாக்குக் காயமாகிய திரிகரணங்கள் வேறாகவும் மாறுபடுகின்ற கீழோரைத் துணையாகப்பிடித்து, தருமம் திரியும் எனை ஆள்வையோ - இயல்பு மாறுபடுகின்ற என்னையும் ஆண்டருளுவீரோ ?, வெற்றித் தானவர்தம் பெருமந்திரியை உதரத்தில் வைத்தபிரான் - வெற்றி பொருந்திய அசுரரது பெரிய மந்திரியாகிய சுக்கிரனை வயிற்றின்கண் வைத்தருளிய சிவபெருமானே, அளகை ஒரு மந்திரி நண்பனே - அளகாபுரிக்கிறைவனாகிய ஒப்பற்ற குபேரனுக்கு நண்பினை உடையவரே, மறைக்காட்டுறை உத்தமனே - திருமறைக்காட்டி லெழுந்தருளிய உத்தமரே (எ-று.) 46

உத்தமரத்தி யுரியார்மறைசை யொருத்தர்வெள்ளோ
லத்தமரத்தி னிறைகங்கைவேணிய ராலெரித்த
நத்தமரத்தி முரசான்செழுங்கணை நல்கமுன்னுள்
வைத்தமரத்தின் மெய்த்தூரில்வெந் நீர்விடுமங்கையரே.

(இ-ள்) உத்தமர் - மேலாயவர், அத்திஉரியார் - யானை யின்து தோலினையுடையார், மறைசை ஒருத்தர் - திருமறைக்காட்டி லெழுந்தருளிய ஏகர், வெள்ஒலம் தமரத்தின் நிறைகங்கை வேணியரால் எரித்த - வெண்மையாகிய அலையினதொலி நிறைந்த கங்கையைச் சடாபாரத்திலே தரித்த இச்சிவபெருமானால் எரிக்கப்பட்ட, நத்து அமர் அத்தி முரசான் செழுங்கணை நல்க-சங்குகள் பொருந்திய கடலாகிய முரசினையிடைய மன்மதனுக்குச் செழித்த மலராகிய பாணத்தைக் கொடுக்க, முன்னுள்வைத்த மரத்தின் தூரில் மெய்வெம் நீர்விடும் மங்கையரே - முற்காலத்தில் வைத்துப் பயிர்செய்த மரத்ினது வேரில் மெய்யாகவே வெந்நீரை விடுவீர்களாக தோழிகளே — (எ-று.) தலைவி வருந்தல். (47)

மங்கலமந்தர முன்னுதநின்கண்ட வண்ணங்கண்டு
சங்கலமந்தர வங்கொண்டுகூனிச் சுரிமுகஞ்சார்ந்
திங்கலமந்தர மத்தான்கையிற்புக் கிருந்ததுநா
கங்கலமந்தர தம்புவியான்மறைக் கானமின்னே.

(இ-ள்)மங்கலம் அந்தரம் உன்னுத - மங்கலத்திற்கு முடிவு கருதப்படாத, நின்கண்ட வண்ணங்கண்டு - உன்னுடைய கழுத்தினதழகைக்கண்டு, சங்கு அலமந்து அரவங்கொண்டு கூனிச் சுரிமுகஞ்சார்ந்து - பாஞ்சசன்னியமென்னும் சங்கமும் சுழன்று ஏங்குதலையுற்று வளைந்து சுரிந்த முகத்தினையுடையதாய், இங்கு அல மந்தர மத்தான்கையிற் புக்கு இருந்தது - இவ்விடத்தும் அன்று, (வைகுண்டத்திலே) மந்தரகிரியை மத்தாகக்கொண்ட திருமாலினது கையினிடத்தே போயிருக்கப் பெற்றது, நாகம் கலம் அந்தப் புவிரதத்தான் மறைக்கானமின்னே - சர்ப்பத்தை யாபரணமாகவும் அழகிய பூமியை இரதமாகவுமுடைய சிவபிரானது திருமறைக் காட்டிலிக்கும் மாதே —(எ.று.) இங்கலமந்தரம்

என்பதற்கு இவ்வுலத்தில் அமைதி பெற்ற மந்தரகிரியெனி னும் பொருந்தும், அந்த என்பதைப் பண்டரி சுட்டாக்கி னுமாம். இஃது நலம்புனைந்துரைத்தல். (48)

**கானவண்டானக் களிற்றைவர்க்காகக் கழுவிற்றங்கு**
**மானவண்டானது காணுததாமரை யானுஞ்செவ்வி**
**ஞானவண்டானத் துறைவோனும்வாவியி னடிக்கொத்து**
**மீனவண்டானந் திரிமறைக்காட் டுறைவித்தகனே.**

(இ-ள்) கானவண் தானக் களிற்று ஐவர்க்காக - காட்டிலே திரிகின்ற மிக்க மதத்தினைச் சொரியும் யானைகளை யுடைய பஞ்சபாண்டவர்களின் நிமித்தமாக, கழுவில் தங்கும் மான வண்டுஆனது காணுத தாமரையானும்-நீரில் நாட்டிய கழுமுனையிற் றங்கிய பெருமை பொருந்திய வண்டுவடிவ மான திருமாலாற் காணுதற்கரிய பாததாமரையை யுடைய வரும், செவ்வி அண்ஞானதானத்து உறைவோனும் - அழகு பொருந்திய ஞான பூமியிலிருப்பவரும், வாவியில் நாடிக் கொத்தும் மீனவண்டானம் திரி-தடாகங்களிலே ஆராய்ந்து கொத்திக்கொள்ளு மீன்களையுடைய நாரைகள் திரியப் பெற்ற, மறைக்காட்டுறை வித்தகன் ஏ - திருமறைக்காட்டி லெழுந்தருளிய பெரியோர் —(எ-று) "மீன" என்பது மீன் என்னும் பெயரடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம், மகர வீறு கெட்ட மீனம் எனினுமாம். (49)

**வித்தந்தியாக முதவாவுலோபர்க்கு வீணிற்சொற்பாட்**
**டைத்தந்தியாக பதியென்பரான்முத லாம்பிள்ளையை**
**மைத்தந்தியாகப் பெறுமறைக்காடர் வயங்குமுண்மைச்**
**சித்தந்தியாகத் தியாகரைப்பாடிலர் தீங்கறவே.**

(இ-ள்.) வித்தம் தியாகம் உதவா உலோபர்க்கு - திரவி யத்தைப் (புகழும் புண்ணியமும் அடையுமாறு) கொடாத

உலோபிகள் பொருட்டு, வீணிற் சொற்பாட்டைத் தந்தி யாக பதி என்பார்ஆல்-யாதொரு பயனுமின்றிப் புகழ்ச்சிக்க விபாடி அவர்களை நூறு யாகங்களைச்செய்த தேவேந்திரனே யென்று கொண்டாடுவர், முதலாம் பிள்ளையை மைத்தந் தியாகப் பெறுமறைக்காடர்-முதற் பிள்ளையாகிய விநாய கரைக் கரிய யானை முகம் உடையவராகப்பெற்ற திருமறைக் காடரும், வயங்கும் உண்மைச்சித்து - விளங்குகின்ற மெய்ம் மையான சித்துவடிவமா யுள்ளவரும், அந்திஆகத் தியா கரைத்தீங்கு அறப்பாடிவர் ஏ - செக்கர் வானத்தையொத்த சிவந்த திருமேனியையுடைய தியாகராஜருமாகிய சிவபெரு மானைத் தமது பாவங்கள் கெடப் பாடுதலைச் செய்யார் — (எ-று.) இவர் ஊழிருந்தபடி என்னை? என்பது எஞ்சிநின் றது ஆல் ஏ அசைகள். (50)

**தீங்கரும்பாரஞ் சொரிவயல்வேதத் திருவனத்துக்**
**கோங்கரும்பார மணிமுலைச்சாமளக் கோமளப்பெண்**
**பாங்கரும்பாரண சூலாயுதாவிப் படிவச்சுமை**
**தாங்கரும்பார மினிப்பிறவாமுத்தி தந்தருளே.**

(இ-ள்) தீம்கரும்பு ஆரம்சொரிவயல் திருவேததவனத்து- இனிய கரும்புகள் முத்தினைச் சொரியும் கழனிகள் சூழ்ந்த அழகிய திருமறைக்காட்டினிடத்தே, கோங்கு அரும்பு ஆரமணிமுலைச் சாமளக்கோமளப் பெண்பாங்கர்உம்பர்- கோங்கரும்புபோன்ற சந்தனமணிந்த முலையினையும் பசிய நிறத்தினையுமுடைய அழகிய உமாதேவியரைப் பாகத்தி லுடைய மஹாதேவரே, ரணசூல ஆயுதா-யுத்தத்தில் வெற் றிபெறும் சூலாயுதத்தை யுடையவரே, இப்படிவச் சுமை தாங்கரும் பாரம் - இவ்வுடம்பாகிய சுமைபொருத்தற்கரிய பாரமாயிருக்கின்றது ஆதலால், பிறவா முத்தி இனித்தந்

தருள் ஏ- பிறவாத வீடுபேற்றை இனிநீர் தந்தருளுவீராக — (எ-று.) தீங்கரும்பாரஞ் செறியெனப் பாடமாயின் இனிய கரும்பிற் பொருந்திய சாறுநிறைந்த எனப் பொருள் கொள்க. (51)

**தந்தம்படைத்த களிறென்றுதாக்கத் தனிபுரந்து**
**நுந்தம்படைத்தலை வேல்விழிக்கன்னியை நோக்கியதா**
**னந்தம்படைத்தலைச் சால்வழியூர்ந்திடு நான்மறைசை**
**யிந்தம்படைத்த சடையான்வெற்பாடவ ரெண்சிங்கமே.**

(இ-ள்.) தந்தம்படைத்த களிறு ஒன்று தாக்கத்தனிபுரந்து- கொம்பினையுடைய யானை ஒன்று எதிர்க்க(அதனைக்கொன்று) காத்து, நும்தம் தலைவேற் படைவிழிக் கன்னியை நோக்கியதுஆல் - உங்கள் தலைமையாகிய வேற்படைபோலுங் கண்ணினையுடைய பெண்ணை நோக்குற்றது, நந்து அம்படைச் சால் வழித்தலை ஊர்ந்திடும் நான்மறைசை - சங்குகள் அழகிய படைச்சாலின் வழியிலே ஊரப்பெற்ற திருமறைக் காட்டிலே வீற்றிருக்கின்ற, இந்து அன்பு அடைத்த சடையார் வெற்பு ஆடவர் எண் சிங்கமே - சந்திரனையும் கங்கையையும் தரித்துள்ள சடையினையுடைய சிவபிரானது மலைக்கண் ஆண்மையையுடையோர் மதிக்குந்தலைவராகிய சிங்கம்— (எ-று.) சிங்கம் நோக்குற்றது எனக்கூட்டுக. இஃது பாங்கியறத்தோடு நிற்றல். (52)

**சிங்கமுருக்குவன் றென்காலனுவியைச் செப்பிலிப்பேர்**
**கங்கமுருக்கர னுய்விருந்துண்ணக் கனத்திடுமென்**
**னங்கமுருக்கும் பிணியங்குமிங்கு மலையவைத்தாய்**
**பங்கமுருக்கிதழ் சேர்மறைக்காட்டுறை பண்ணவனே.**

(இ-ள்) தென்காலன் செப்பில் இப்பேர்சிங்க ஆவியை முருக்குவன் - தென்றிசைக்குரிய இயமன் சொல்லுமிடத்து

இந்த (எனது) பெயருங் கெடும்வண்ணம் (முடிவில்) உயிரினைக் கொண்டுபோய் வருத்துவன், கங்கம் உருக்குரல் நாய் விருந்துண்ணக் கனத்திடும் என் அங்கம் பிணி உருக்கும் - (பருந்துகளும் கோபத்தோடு குரைக்கும் நாய்களும் விருந்தாகத் தின்னும்படி பருத்திருக்கும் எனது சரீரத்தை (இப்போது) வியாதிகளுருக்கி வருத்தும்; அங்கும் இங்கும் அலையவைத்தாய் - இவ்வகையாக இம்மையினும் மறுமையினும் என்னை வருத்த முற்றலையும் வண்ணம் செய்தீர், பங்கு அம்முருக்கிதழ் சேர்மறைக்காட்டுஉறை பண்ணவனே - பாதித்திருமேனியில் அழகிய முருக்கமலரினையொத்த அதரத்தையுடைய உமாதேவியார் பொருந்தப்பெற்ற திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கும் மஹாதேவரே-(எ-று.) இனி யித்துயரினை யொழித்தருள்வீராக என்பது எஞ்சி நின்றது. முருக்கிதழ் அன்மொழித்தொகை. செப்பிலின்னே யென்பதூஉம்பாடம்.

**பண்ணமுதலையின் சொல்லிபங்காளன் பகைவிடம்வன்**
**கண்ணமுதலையி னேமியையேவிய கண்ணனுயி**
**ருண்ணமுதலையின் ரேன்மறைக்காடனை யுண்டென்பதே**
**யெண்ணமுதலையின் கானிடைப்பூவி லினிநெஞ்சமே.**

(இ-ள்) பண் அமுது அலை இன்சொல்லிபங்காளன்-இராகத்தினையும் அமிர்தத்தினையும் வென்ற இனிய மொழியினையுடைய உமாதேவியாரைப் பாதித்திருமேனியிலுடையாரும், பகைவிடம் வன்கண்ணமுதலையின் நேமியை ஏவிய கண்ணனுயிர் உண்ணமுதல் ஐயின்றேன்-பகையாகிய விடமானது கொடியமுதலையின் பேரில் சக்கரத்தைவிடுத்த திருமாலுயிரை யுண்ணுதற்கு முன்னே அதனை யுண்டருளியவருமாகிய, மறைக்காடனை-திருமறைக்காட்டிறைவரை, நெஞ்சமே இனிஐயின்கானிடைப் பூவில்உண்டு என்பதே முதல்

எண்ணம்-மனமே இனி கோழைக்காட்டி னிடையேயுள்ள நமது இதயகமலத்தில் துணையாயுள்ளார் எனத்துணிதலே மேலாகிய எண்ணமாம்—(எ-று.) முதலையின் கானிடைப்பூ வில் என்பதற்கு செங்கிடைக்காட்டினிடத்துள்ள மலர்போலும் பயனற்றவென்மனத்திற் குவமையாக்குவாரு முளர். "கோழைக்காட்டிலுள்ள பூப்போன்ற மனமே" யெனப் பொருள் கூறுவோர் உரை உவமை இல்பொருளாய் யாதோரியையுங் குறித்து நிற்றலின்மையாற்போலியுரையாமென்க ஐயின்றேன் மொழிமுதற்போலி. 54

**நெஞ்சத்திருக்கு மதிநீயைம்பூத நிலயமுநீ**
**கஞ்சத்திருக்கு மரிசேருங்கண்ணனெண் கண்ணனுநீ**
**வஞ்சத்திருக்கு மலமாயைநீங்கிய மாதவத்தோர்**
**தஞ்சத்திருக்கு வனத்துறைகாரண தற்பரனே**

(இ-ள்.) நெஞ்சத்து இருக்கும் மதிநீ - மனத்தின் கண் உள்ள அறிவும் நீரே, ஐம்பூதநிலயமும் நீ-பஞ்சபூதங்களுக்கு இருப்பிடமும் நீரே, கஞ்சத்திருக் குமரிசேரும் கண்ணன் (நீ) - தாமரைமலரிலிருக்கும் இலக்குமியாகிய மாது சேரப் பெற்ற திருமாலும் நீரே, எண்கண்ணனும் நீ - எட்டுக்கண் ணினையுடைய பிரமனும் நீரே, வஞ்சத்திருக்கு மலம்மாயை நீங்கிய மாதவத்தோர் - வஞ்சகமாகிய குடிலத்தினையுடைய ஆணவமும் மாயையும் (கன்மமும்) ஆகியமலங்கள் நீங்கப் பெற்ற பெரியதவத்தினையுடையார்க்கு, தஞ்சத்து இருக்கு வனத்துறை காரணதற்பரனே-புகலிடமாயுள்ள திருமறைக் காட்டி லெழுந்தருளியிருக்கின்ற நிமித்த காரணராகிய பசு பதியே—(எ-று.) 55

**தற்கோலமென்ற கனிவாயைவேட்டுத் தயங்குமணப்**
**பொற்கோலமென் றடியேன்காண்குவன்புவி புக்கிடந்த**
**முற்கோலமென்றவி சம்புயன்போகி முதலமரர்**
**நிற்கோலமென்ற பொழுதாலமுண்ட நிருமலனே.**

(இ-ள்.) தற்கோலம்மென்ற கனிவாயையேட்டு - தக்கோல முதலிய வாசனைப்பொருளை (ப்பாகடையோடு) உண்ணுங் கொவ்வைக்கனிபோலும் வாயினையுடைய உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்து, தயங்கும் பொன்மணக்கோலம் அடியேன் காண்குவன் என்று - விளங்குகின்ற உமது அழகிய திருமணக்கோலத்தை அடியேன் தரிசிப்பது எப்போது?, முன்புவி புக்குஇடந்த கோலம்மென்தவிசு அம்புயன்போகி முதல் அமரர் - முன்னே பூமியிற்புகுந்து அதனைப் பிளந்தவராக வடிவமாகிய திருமாலும் மெல்லிய தவிசாகிய தாமரைமலரிலிருக்கும் பிரமனும் இந்திரனுமுதலிய தேவர்கள், நிற்குஓலம் என்றபொழுது ஆலம்உண்ட நிருமலனே- உமக்கு நாங்களடைக்கலம் என்று முறையிட்டகாலத்து (அவர்களுயிரைக்காக்கும் பொருட்டு) நஞ்சினையுண்டருளிய நிருமலரே — (எ-று.) 56

**நிருமலரஞ்சனை சேய்பணிமாலத்தர் நீள்விசயற்**
**பொருமலரஞ்ச நையந்திடும்வேத புரிவரைக்கோன்**
**மருமலரஞ்சனை யன்னார்மருர்சொல் வருவர்வன்க**
**ணருமலரஞ்சனை யாதொழியாய்மதி யாய்மனமே.**

(இ-ள்.) நிருமலர் - மலங்களை ஒழிந்துள்ளார், அஞ்சனை சேய் பணிமால் அத்தர் - அஞ்சனாதேவியின் புத்திரனாகிய அனுமான் பணியப்பெற்ற திருமாலுக்குப் பிதாவானவர், நீள்விசயன் பொரும்மலர்-நெடியஅருச்சுனனோடுமல்யுத்தஞ் செய்தவர், அஞ்சம் நையந்திடும் வேதபுரிவரை மருமலர்க் கோல் அஞ்சனை அன்னார் - இவரது அன்னங்கள் விரும்பும் திருமறைக்காட்டு மலையில் வாசனை பொருந்திய மலர்க்கணை ஐந்தினையுடைய மன்மதனையொத்த தலைவர், சொல்மருர் வருவர் வன்கண்ணரும் அலர் - தமதுசொல் வேறுபடார் விரைவில் வருவர் அருளில்லாதாருமல்லர், அஞ்சல்மனம்

நையா தொழியாய் மதியாய் ஏ - பயப்படாதே மனம் வருந்தாதொழியாய் மதியினையுடையவளே— (எ-று.) இஃது வாய்மை கூறிவருத்தந்தணித்தல்.

மனக்காக்கைமூவர் தமிழ்க்குயில்வாணியை வைத்தகுழை
யுனக்காக்கைவஞ்ச வினையேன்புன்னாவி னுரைத்ததமிழ் [சந்
சினக்காக்கைவாயி னுறுங்குரற்சொல்லொக்குஞ் சேண்முகிற்
தனக்காக்கைநீட்டு மறைக்காட்டில்வாழ் சிவசம்பரனே.

(இ-ள்.) மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில் வாணியை வைத்தகுழை உனக்கு - மனக்காவலுடைய மூவரது தேவாரத் தமிழாகிய குயிலினது மொழியை யேற்றருளிய உமது திருச்செவிக்கு.வஞ்ச ஆக்கைவினையேன் புல்நாவில் உரைத்த தமிழ் - பொய்ம்மையாகிய உடலெடுத்தற்குரிய தீவினையையுடைய யான்புல்லிய நாவினாற்சொல்லிய பாடல், சினக்காக்கைவாயின் உறுங்குரற்சொல் ஒக்கும் - கோபமுள்ள காக்கை வாயிற் பிறக்கும் (விரசமாகிய) பேரொலியினையுடைய சொல்லையொக்கும், சேண்முகில் சந்தனக்கா கை நீட்டும் மறைக்காட்டில் வாழ் சிவசம்பு அரனே - ஆகாயத்தினுள்ள மேகங்களினிடத்துச் சந்தனச் சோலைகள் கிளைகளாகிய கைகளை நீட்டுகின்ற திருமறைக்காட்டி லெழுந்தருளிய சிவபெருமானே, சம்புவே சங்காரகருத்தரே — (எ-று) (58)

சம்பாதியந்தச் சடாயுவும்போற்றுந் தலைவன்புரம்
வெம்பாதியந்த மிலாமறைக்காடன் விரைக்குழல்சேர்
செம்பாதியந்தண் சமயமல்லாது திரிநெஞ்சமே
நம்பாதியந்தகர் பொல்லாச்சமயங்க ளன்றெனவே.

(இ-ள்.) சம்பாதி அந்தச் சடாயுவும் போற்றுந் தலைவன் - சம்பாதியும் அழகிய சடாயுவுமாகிய புள்ளரசர்களால் வழிபடப்பெற்ற தலைவர், புரம்வெம்பு ஆதி அந்தம் இலா மறைக்காடன் - திரிபுரத்தை எரித்த முதலும் ஈறும் இல்லாத திருமறைக்காட்டையுடையார், விரைக்குழல் சேர் செம்பாதி - வாசனை பொருந்திய கூந்தலையுடைய உமாதேவியார் பொருந்திய செவ்வியபாதித் திருமேனியையுடையார், அம்தண் சமயம் அல்லாது-இவரது அழகிய தண்ணிய சைவசமயத்தையன்றி, திரிநெஞ்சமே அந்தகர் பொல்லாச்சமையங்கள் நன்றென ஏ நம்பாதி-மாறுபட்டு மூலும் மனமே அறிவிலாக்குருடர்கள் கைக்கொள்ளும் (மற்றத்) தீயசமயங்களை நன்றென நம்பா தொழி—(எ-று.) விரைக்குழல் அன்மொழித்தொகை. அந்த என்பதைப் பண்டறிசுட்டாக்கினுமாம். (59)

**நன்றென்புலமைந் திலவாயொன்றுமே நவையாயினுஞ்சீர்**
**நின்றென்புலவுகறை யாக்கைதுஞ்சுமுன் னீள்பொதியக்**
**குன்றென்புலவர்முன் னோர்கவியாயினுங் கூறியதால்**
**வன்றென்புலவனைத் தாங்கியவேத வனத்தனையே.**

(இ-ள்.) என்புலம் ஐந்திலவாய் ஒன்றுமே நவையாயினும் நன்று - எனது ஐந்து இந்திரியங்களுள் வாக்கு ஒன்றுமே குற்றமுள்ளதாயினும் நல்லதாம் (ஏனெனில்), சீர் நின்று என்பு உலவு கறையாக்கை துஞ்சும்முன் - சிறப்பொழிந்து எலும்பினையும் ஓடும் உதிரத்தினையுமுடைய எனது சரீரம் கெடுவதற்குமுன்னே, நீள்பொதியக்குன்று என்புலவர்முன் - நீண்ட பொதியமலையோடொத்தவரென்னும்புலவர்களுக்கு முன்னே, ஓர் கவியாயினுங்கூறியது ஆல்-ஓர் செய்யுளாயினும் பாடுந்திறத்தினைப்பெற்றது, வல்தென்புலவனைத் தாக்கிய வேதவனத்தனையே - வலிய தென்றிசைக்கிறை

வணுகிய இயமனையுதைத்த திருமறைக்காட்டிலெழுந்தருளிய சிவபெருமானுக்கு-(எ-று) சிவபெருமானுக்கு ஓர் கவியாயினும் கூட்டுக. நவையாயினும் என்பதற்குச் சான்றோர்கவியேலன்றிக் குற்றமுள்ளதாயிருப்பினுமெனப் பொருள்கொண்டு கவியோடு முடிப்பினுமாம். ஆல் அசை. வேதவனத்தனை வேற்றுமைமயக்கம். 60

வனக்கோதை யேயுமறுகால் துவைத்துவண் டேன்பிழிந்த
கனக்கோதை யேனளித்தீர் கரும்பாட்டிய கட்டிநல்கா
தெனக்கோதை வாரித்திருவே மதிமலி யின்றமிழ்விற்
பனக்கோதை பால்விடுத்தான் மறைக்காடன் பனிவரைக்கே.

(இ-ள்.) வனக்கோதை ஏயும் அறுகால் துவைத்துவண் டேன்பிழிந்த - அழகிய பூமாலையிற்பொருந்தும் வண்டுகள் காலாற்றுவைத்து வளவிய தேனைப்பிழிந்து கொள்ளப் பெற்ற, கனக்கோதை - மேகம்போல விளங்கும் கூந்தலே, கரும்பாட்டிய கட்டி நல்காது எனக்கு ஏன் அளித்தீர்- கரும்பை ஆலையில் ஆட்டிய இரசத்தினுலாய வெல்லக்கட்டியையொத்த முலைகளை எனக்குக்கொடாது ஏன் கொடுக்கின்றீர், ஓதைவாரித்திருவே - ஒளியினையுடைய சமுத்திரத்திற்பிறந்த இலக்குமியையொப்பீர், மதிமலி இன்தமிழ் விற்பனக்கோதைபால் விடுத்தான் மறைக்காடன் பனிவரைக்கு ஏ-''மதிமலிபுரிசை'' என்னும் இனிய தமிழ்ப் பாசுரத்தைக் கல்வியிற்சிறந்த சேரமான் பெருமாளிடத்தே விடுத்தருளியவராகிய திருமறைக்காட்டீசரது குளிர்ந்த மலையின்கண்ணே—(எ-று) திருவே, மலையின்கண்ணே ஏன் கொடுக்கின்றீர் எனக்கூட்டுக. கருப்புக்கட்டியைத்தராது கோதைநீர் தந்தது அருளின்மையென்பது குறிப்பு. இது புறங்காட்டல். ''இப்பாட்டை அகத்தமிழ் புறத்தமிழ்த் திறனறியார் தோன்றியவாறே புறங்காட்டலென்னப்

புதிதொன்றுபடைத்துக் கூறுவர்'' என்னும் புலவர் இப்புறங்காட்டற்றுறை பள்ளியிடத்தாடலின் பாற்படுதலும், முல்லையந்தாதி முதலிய பலவந்தாதியிலும் விக்கிரம சோழக்கோவை முதலிய பல கோவைகளிலும் பெரும்பாலும் வழங்கி வருதலும், ஆன்றோர்கொள்கையும் ஆகிய இன்னபிறவற்றைச் சிறிது முணர்ந்திலர்போலும். (61)

**பனிச்சந்திரனணி வேணியுந்தாங்குஞ்செம் பஞ்சினுட**
**னனிச்சந்திரளன்னத் தூவியிற்சேக்குமஞ் சீறடிபாற்**
**றனிச்சந்திரவி னடந்தான்சிகர தளம்பொலிமே**
**தினிச்சந்திரவரை வில்லான்மறைசையிற் செந்துருவே.**

(இ-ள்.) பனிச்சந்திரன் அணிவேணியுந் தாங்கும்-மான் மழு சதுர்ப்புய முதலியனவுமன்றிக் குளிர்ந்த சந்திரனைத் தரித்த சடையுந் தாங்கப்பெற்றுச் சாரூபம் பெறும், செம்பஞ்சினுடன் அனிச்சம் திரள் அன்னத்தூவியில் சேக்கும் அம்சீரடிபால்-செம்பஞ்சினுடனே அனிச்சமலரும், திரளாகிய அன்னத்தின் றூவியும் ஆகிய இவைகளை (மிதிப்பினும்) சிவக்கும் அழகிய சிறிய பாதத்தையுடைய பரவையாரிடத்திலே, தனிச்சந்து இரவில் நடந்தோன் - தனியே தூதாக இரவில் நடந்தோராகிய, மேதினி சிகரதளம்பொலி சந்திரவரைவில்லான் - பூமியிலுள்ள சிகரக்கூட்டங்கள் விளங்குகின்ற பொன்மலையை வில்லாகக் கொண்டருளிய சிவபிரானது, மறைசையில் செந்து உரு ஏ-திருமறைக் காட்டில் செந்துக்களாய உருவுடையனவும்—(எ-று) செந்துருவும் தாங்கும் எனக் கூட்டுக. வேணியும் என்பதிலுள்ள எச்சவும்மையால், மான்மழு சதுர்ப்புய முதலியனவும் அன்றி என்பது பெறப்படுமாறுணர்க. செந்துருவும் என்பதில் உம்மை விகாரத்தாற்றொக்கது. (62)

உருப்பவனுசன வாய்த்தேரையிற்பிணிக் குள்ளுடைந்தேன்
கருப்பவநாச நதிமணிகன்னிகைக் கான்மறைசை
நெருப்பவனுசன காதியர்தேசிக நீள்பதுமத்
திருப்பவனுசனப் பாற்கடலான்பணிந் தேத்திறையே.

(இ-ள்.) உருப்பவனுசன வாய்த்தேரையிற் பிணிக்கு உள் உடைந்தேன்-தோபத்தையுடைய காற்றையுண்ணும் பாம்பின்வாய்ப்பட்ட தேரைபோல வியாதியிற் சிக்குண்டு மனம் வருந்தினேன், கருப்பவம்நாச மணிகன்னிகைநதி மறைசைக்கான் - கருவினையடையும் பிறவியைப்போக்கும் மணி கர்ன்னிகைத்தீர்த்தம்பொருந்திய திருமறைக்காட்டி லெழுந்தருளிய, நெருப்பவனு-நெருப்பினையுடைய சுடலைக் கண் நடிக்கின்றவரே, சனகாதியர் தேசிக-சனகர் முதலிய முனிவருக்கருளிய குருமூர்த்தியே, நீள் ஆசனப்பதுமத்து இருப்பவன் பாற்கடலான் பணிந்து ஏத்து இறையே-நீண்டதாளினையுடைய ஆசனமாகிய பதுமமலரில் இருக்கின்ற பிரமனும் பாற்கடலையுடையவனுகிய திருமாலும் வணங்கித்துதிக்கப்பெற்ற சிவபெருமானே — (ஏ-று) நெருப்ப, குறிப்புப் பெயரெச்சம். (63)

ஏத்திரப்பாண்டி யெனவையமேற்கு மிறைவன்மதிக்
கோத்திரப்பாண்டிய னுகிமண்ணாண்டவன் கோலநரைக்
காத்திரப்பாண்டின் மறைக்காடனைமலக் காயமென்னுஞ்
சூத்திரப்பாண்டி லிறுமிறுங்காணுந் தொழுமுன்னமே.

(இ-ள்.) இரப்பு ஆண்டியென ஐயம் ஏற்கும் ஏத்து இறைவன்-இரத்தல் செய்யும் ஆண்டியாகப் பிச்சைகொண்டருளியயாவருந்துதிக்கப்பெற்ற கடவுள், மதிக்கோத்திரப் பாண்டியன் ஆகிமண் ஆண்டவன்-சந்திரவமிசத்திற்குரிய

பாண்டியனுகத் திருவுருக்கொண்டு பூமியைப் பரிபாலித்தவர், கோலநரைக் காத்திரப்பாண்டில் மறைக்காடனை-அழகிய வெண்மையான பெரிய இடபவாகனத்தையுடைய திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கின்ற இச்சிவபெருமானை, மலக்காயம் என்னும்சூத்திரப் பாண்டில் இறும் இறும் முன்னமே தொழுங் காணும் - மலத்தால் நிரம்பப் பெற்றஇச்சரீரமாகிய சூத்திரச்சகடமானது விரைவில் இற்று விழும் ஆதலால் அவ்வாறு விழுவதற்கு முன்னமே வணங்கு மின் — (எ-று) அடுக்குவிரைவு குறித்துநின்றது காணும் அசை. 64

**முன்னுவலாரிசை யுங்கூடற்சங்கர் முதியவெள்ளை**
**நன்னுவலாரியன் மாமறைக்காடர் நயங்கொள்பச்சை**
**மின்னுவலாரி வரைக்காணவேண்டும் விழிசதப்பத்**
**தென்னுவலாரி படைத்தான்வையு மிமைப்பிலவே.**

(இ-ள்) முன் நாவலார் இசையும் கூடற்சங்கர்-பூர்வத்திலே புலவர்கள் கூடிய மதுரை முச்சங்கத்திலும் தாமுமொரு புலவராய் வீற்றிருந்தவர், முதிய வெள்ளை நல் நாவலார்-பழைய வெண்மையாகிய சிறந்த நாவல்விருட்சத்தினடியில் எழுந்தருளியவர், இயல்மா மறைக்காடர்-அழகிய பெருமைபொருந்திய திருமறைக்காடர், நயங்கொள்பச்சை மின் ஆவலார்-அன்பு பொருந்திய பசுமையாகிய மின்னற்கொடியை ஒத்த உமாதேவியாரிடத்தே விருப்பத்தினையுடையார், இவரைக்காணவேண்டும் விழி வலாரிசதப்பத்து என்னுப்படைத்தான - இவரது திருக்கோலத்தைத் தரிசனம் பண்ணுகிறதற்கு வேண்டுங்கண்கள் (இரண்டமையாதெனத்) தேவேந்திரன் ஆயிரமாகப் பெற்முன், அவையும் இமைப்பில் ஏ-அக்கண்களும் (பார்த்தமையாமையால்) இமையாதிருக்கின்றன — (எ-று) இயல் என்பதற்கு இயற்றமிழ் வழங்கும் எனினும் பொருந்தும்.

**இமையாதவம்பகர் சூழ்மறைக்கானத் திறைவகங்கைச்**
**சுமையாதவம்பக வன்செயச்சென்னி துளக்கரனே**
**கமையாதவம்பகல் வீசியவாரிதிக் காசினியோ**
**ருமையாதவம்பக ரார்வேடனச்சிலை யுண்டதற்கே.**

(இ-ள்) இமையாத அம்பகர் சூழ்மறைக்கானத்து இறைவ-இமையா நாட்டமுடையவர்களாகிய தேவர்கள் சூழ்ந்திரு மறைக்காட்டீசரே, கங்கைச் சுமையா-கங்கையைத் தாங்குகின்றவரே, பகவன் தவஞ்செயச் சென்னி துளக்கு அரனே-பிரமன் தவஞ்செய்ய (மகிழ்ந்து) சிரக்கம்பம் செய்தருளியவரே, பகல் ஆதவம் வீசியவாரிதிக் கமைக்காசினியோர்-சூரியன் வெயிலினை வீசுகின்ற கடலாற் சூழப்பெற்ற பொறையினையுடைய பூமியிலுள்ளோர், வேடன் எச்சிலையுண்டதற்கு உமையாது அவம்பகரார் - வேடராகிய கண்ணப்பநாயனர் எச்சிலைநீர் உண்டதற்கு உம்மை என்ன குற்றஞ் சொல்வார்கள். — (எ-று) உமையென்பது ஒருமையிற் பன்மை. காசினியோருமை என்றதற்குக் காசினியோரும் ஐயனே எனப் பொருள் கூறினுமாம். வீசிய காலவழுவமைதி. பொறுமையாகிய வெயில் பகலில் வீசப்படுகின்ற கடலாற்சூழப்பட்ட நிலவுலகத்தோர் எனப் பொருள் கூறில், பொறுமையுயிர்களுக்கேயன்றி வெயிற்கின்மையானும் பொருட்சிறப்பின்மையானும் அவ்வுரை பொருந்தாமையுணர்க. 66

**உண்டலத்தானையன் பின்வந்தவண்டின மூதுந்துழாய்க்**
**கொண்டலத்தானைய னஞ்சுடர்மூன்றையுங் கொண்டமுக**
**மண்டலத்தானையன் கொண்டாடும்வேத வனத்தன்சிறு**
**கண்டலத்தானையன் நீருரிவாங்குங் கருணைக்கே.**

(இ-ள்) உண்டு-உளதாம், அலம்தானையன்பின் வந்த வண்டினம் ஊதும் துழாய்க்கொண்டல் அத்தான்-கலப்பைப் படையினையுடைய பலராமனுக்குப்பின் அவதரித்த வண்டுக்கூட்டங்கள் ஒலிக்கின்ற துளவமாலையைத் தரித்த திருமாலுக்கு மைத்துனர் என்னும் முறையினையுடையாரும், சுடர்மூன்றையும் நயனம்கொண்ட முகமண்டலத்தான் - சோமசூரியாக்கினி என்னும் முச்சுடர்களையும் (மூன்று) கண்களாகக் கொண்டருளிய திருமுகமண்டலத்தினையுடையாரும், அயன்கொண்டாடும் வேதவனத்தன்-பிரமனாற் புகழப்பெறும் திருமறைக்காடரும், சிறுகண்தலத்து ஆனைஈர் உரி அன்று வாங்கும் கருணை எற்கு ஏ-சிறியகண்ணினையுடைய யானையை உரித்த தோலினை (ப்போர்வையாகக்) கொண்டவருமாகிய சிவபெருமானது கருணை எனக்கு—(எ-று) எனக்கு உளதாம் எனக் கூட்டுக; இது பூட்டுவிற்பொருள்கோள் கையைக்கைத்தலம் என்றாற் போலக் கண்ணைக் கண்டலம் என்றார். வாங்கும் என்னும் பெயரெச்சம் வாங்குவோன் எனப்பெயராய்நின்றது: பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையில் எண்ணுந் திருக்குறவில் ஒழுகுவோனது ஆண்மை என்றார்போல. ஆனையீருரிவாங்குங் கருணை என்பதற்கு யானையிலிழுத்த தோலைக்கொண்டகிருபை என்பது உரையன்மையா மாறுணர்க. 67

எற்பதங்கன்று வளர்சோமனங்கி யிவர்செய்கையாய்
நிற்பதங்கன்று திருமறைக்காட னிறைவகுந்த
நற்பதங்கன்று நிரைமேய்த்தவற்கரு ணதன்பெண்பாற்
சிற்பதங்கன்று மெனச்சென்றதூதன் செயல்வண்ணமே.

(இ-ள்) எல் பதங்கன் து வளர்சோமன் அங்கி இவர்செய்கையாய் அங்கு நிற்பதன்று-ஒளியானது சூரியனும் தூய்மை

மிக்க சந்திரனும் அக்கினியும் ஆகிய முச்சுடர்களது செயலாய் (அவைகளால் விளக்கமுறும்) உலகத்தில் நிற்ப தன்று, திருமறைக்காடன் - திருமறைக்காடரும், இறை இறைவரும், வைகுந்த நற்பதம் கன்று நிரைமேய்த்தவற்கு அருள்நாதன் - வைகுண்டமாகிய நல்ல பதவியைக் கன்று களையும் பசுக்களையும் மேய்த்தவனாகிய திருமாலுக்குக் கொடுத்தருளிய முதல்வரும், பெண்பால் சிற்பதம் கன்று மெனச் சென்ற தூதன் செயல்வண்ணம் ஏ - பரவையாரி டத்து ஞானமே வடிவாயுள்ள திருவடி வருந்துமென்னும் வண்ணம் சென்ற தூதருமாகிய சிவபெருமானது செயல் வண்ணமாய் நிற்பதாம் — (எ-று.) சிவபெருமானுடைய திருமேனியினொளியே முச்சுடர்களுக்கும் ஒளியினைத் தருதலால் உலகத்தில் ஒளி நிலைபெற்று நிற்பது அச்சிவ பெருமான் செயலேயன்றி முச்சுடர்கள் செயலன்றென்பது கருத்து: இதனைத் "தேயமா ரொளிகளெல்லாஞ் சிவனுருத் தேசதென்னூர்" என்னுந் திருவாக்கானு முணர்க. முதலாவது அடியில் தூ என்பது து எனக்குறுகி நின்றது. எல் என்பதனை எழுவாயாகக்கொள்ளாது முச்சுடர்களுக்கு அடையாக்கின், இவர் செய்கையாய் நிற்பதன்று, தூதன் செயல்வண்ணமாய் நிற்பது எனக்கூறும் ஒருமை வினை களுக்கு எழுவாயின்றி அவ்வுரை வழுவாமாறு காண்க. 68

**வண்ணவெண்கண்ணன் மரையாளுறைமறைக்காட்டிறைவர்**
**திண்ணவெண்கண்ணன் மதமாத்திரியுஞ் சிலம்பகம்பூ**
**வுண்ணவெண்கண்ண னணையேநிதம்ப முயர்சுருதிப்**
**பண்ணவெண்கண்ணன் மனையேமுகநண்ப பைந்தொடிக்கே.**

(இ-ள்.) வண்ணவெண்கள்நல் மரையாள் உறை மறைக் காட்டு இறைவர்-அழகிய வெண்மையான தேனையுடைய நல்ல தாமரை மலரில் வசிக்குங் கலைமகள் உறையப்பெற்ற திருமறைக்காட்டீசரது, திண்ண எண்கு அண்ணன்

மதமாத்திரியும் சிலம்பு அகம் - வலியகரடிகளும் பெருமையிற் சிறந்த மதயானைகளும் சஞ்சரிக்கப்பட்ட மலை இடமாம், பூ உண்ண எண் கண்ணன் அணையே நிதம்பம்- பூமியை உண்ண எண்ணுந் திருமாலினது சயனமாகிய அரவமே அல்குலாம், உயர்பண்ண சுருதி எண் கண்ணன் மனையே முகம் நண்ப பைந்தொடிக்கு ஏ-உயர்ந்த பண்ணையுடைய வேதத்தையுணர்ந்த பிரமனது மனையாகிய தாமரை மலரே முகம் ஆம், நண்பனே, பசிய வளையலையுடையாளுக்கு—(எ-று.) இவ்விடத்திவ்வியற்றென்றல். 69

**தொடிப்பாணி நித்திரை யாகாளென் காதிற் றுளைக்குமட்டோ**
**நொடிப்பாணினித்தில தென்னும் விழுமெழு நோமிப்பிவாய்**
**வெடிப்பாணி நித்தில மையோசுடுமென்னும் வேதவன**
**முடிப்பாணி நித்தியப் பெம்மான்பவனி முறையிற்கண்டே.**

(இ-ள்.) தொடிப்பாணி நித்திரை ஆகாள் - வளையலைத் தரித்த கையினையுடைய நமது பெண் துயில்கொள்ளாள், என் காதின் துளைக்குமட்டோ நொடிப்பாண் இனித்திலது என்னும் - என் செவித்துளைக்குமாத்திரமோ பாடுகின்ற இசை இனிக்கவில்லை என்பள், விழும்-விழுவள், எழும்- எழுவள், நோம்-துன்பமுறுவள், இப்பிவாய் வெடிப்பாணி நித்திலம் ஐயோ சுடுமெனும்-சிப்பிவாய் பிளந்துமிழ்ந்த ஆணிமுத்தும் ஐயோ என்னைச் சுடுகின்றதென்பள், வேதவனமுடிப்பாணி நித்தியப் பெம்மான்பவனி முறையிற் கண்டு ஏ - திருமறைக்காட்டிலெழுந்தருளிய முடியிற் கங்கையைத் தரித்த நித்தியராகிய சிவபிரானது திருவுலாவைச்செவ்வே தரிசித்து (மயங்கி)—(எ-று.) என் காதிற்றுளைக்குமட்டோ என்பதற்கு என் காதைத் துளைக்குமளவோ அதனினும் விஞ்சியதெனக் கூறும் உரை, நித்திரையாகாமை எழுதன் முதலியன செவிக்குவிடயமல்லவாதலானும் அவள் கேட்டலேயன்றிப் பார்க்குமன்பினள் அல்ல

ளென்பது பெறப்படுதலானும் பொருந்தாமையுணர்க. இது தலைவி வருத்தம் தாயுரைத்தது. 70

**கண்டங்கடுத்த விராமாலைவேதன் கழிந்ததலை**
**முண்டங்கடுத்த மிசைந்திடும்வானின் முளைத்தபிறைத்**
**துண்டங்கடுத்த நுதலிமையாசலத் துய்யபச்சைப்**
**பெண்டங்கடுத்தது பார்மறைக்காட்டுறை பேரொளிக்கே.**

(இ-ள்.) கண்டம் கடுத்தவிரா - கண்டத்தினிடத்தே ஆலகாலவிடம் நீங்காது, மாலை வேதன் கழிந்ததலை முண்டங்கள் - தரித்துக்கொள்ளும் மாலையோ பிரமனது உடலினின்று கழிந்த தலைகளாம், வானில் முளைத்த துத்தம் இசைந்திடும் பிறைத்துண்டம் கடுத்தநுதல்-ஆகாயத்திலே தோன்றுகின்ற பால்போலும் வெண்மைநிறமுடைய பிறைச் சந்திரனையொத்த புருவத்தினையுடைய, இமய அசலத்துய்ய பச்சைப்பெண்டு அங்கு அடுத்தது - இமய மலையிற் பிறந்த சிறந்த பசிய நிறமுள்ள பார்வதியாராகிய பெண் மனையாளாகப்பொருந்திற்று, மறைக்காட்டு உறை பேர் ஒளிக்கு ஏ - திருமறைக்காட்டிலெழுந்தருளிய பெரிய சோதி வடிவாயுள்ள சிவபெருமானுக்கு, பார் - இத்திருக் கோலத்தைத் தரிசிப்பாயாக—(எ-று) துத்தம் இசைந்திடும் வானின் என்பதற்குத் துத்தம்போல நீலநிறம் பொருந்திய வானின் எனினுமாம். தலைமுண்டம் ஒரு பொருட்பன் மொழி. அங்கு ஏ அசைகள். 71

**ஒளியானிறையுந் திவாகரக்கண்ண னுலகத்துயி**
**ரளியானிறையுந் தியம்புயன்வேதற் கருஞ்சின்மய**
**வெளியானிறையுந்தி முந்நீர்மறைசையில் வெறபணங்கே**
**தெளியானிறையுந் திகைத்தங்கிரேன்வந்து சேருவனே.**

(இ-ள்.) ஒளியால் நிறையுந் திவாகரக்கண்ணன்-ஒளியி ஞலே நிறையப்பெற்ற சூரியனுகிய கண்ணிணையுடையார், உலகத்து உயிர் அளி ஆன் இறை உந்தி அம்புயன்வேதற்கு- உலகத்துயிர்களை காக்கின்ற பசுக்களுக்குத் தலைவனும் நாபிக்கமலத்தையுடையவனுமாகிய திருமாலுக்கும் பிரமனுக்கும், அருஞ்சின் மயவெளியான் - காண்டற்கரிய சிதாகாச வடிவினையுடையார், இறை உந்தி முந்நீர் மறை சையில் வெற்பு அணங்கே -(இவரது) பெருமைபொருந்திய சுழிகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த திருமறைக்காட்டினது மலையில் வசிக்கும் பெண்ணே, யான்இறையும் திகைத்து அங்கு இரேன்வந்து சேருவன்தெளி - யான் சற்றும்மயங்கி அவ்விடத்துத் தாமதித்திரேன் (விரைவிலிங்கு) வந்து சேருவேன் இதனை நீ தெளிவாயாக — (எ-று) இது பிரிவுணர்ந்த தலைவியைத்தேற்றல். 72

**சேருவரிக்கடை யாளமிலாவுருச் சித்தசர்போ**
**லாருவரிக்கடை யேநிற்பராலணங் கேசெழும்பூந்**
**தாருவரிக்கடை பண்பாம்வேதத் தலத்திறைமுந்**
**நீருவரிக்கடை வெங்காளபோசன னீண்மலைக்கே.**

(இ-ள்.) இக்கு அடையாளம் இலாஉருச் சித்தசர்போல் சேருவர் - கருப்பு வில்லின் அடையாளம் ஒழிந்த அழகிய மன்மதனை ஒத்து (நஞ்சீறூர்க்கண் வந்து) சேருவர், இக்கடையே நிற்பர் ஆல்அணங்கே உவர் ஆர்-இந்த நமது கடைத்தலையில் (வருந்தி) நிற்பர் தெய்வப்பெண்ணினை யொப்பாய், அவர் யார்? செழும்பூந்தாருவரிக் கடைபண் பாடும் வேதத்தலத்திறை-செழித்த பூமரங்களில் வண்டு கள் இசைபாடப்பெற்ற திருமறைக்காட்டில் எழுந்தருளிய வரும், முந்நீர் உவரிக்கடை வெங்காளபோசனன்-முந்நீர் ஆகிய கடலிற்றேன்றிய விடத்தையுண்டருளியவருமாகிய

சிவபிரானது, நீள்மலைக்கு ஏ - நீண்ட மலையினிடத்தே (எ-று) இது குறைநயப்பித்தல். 73

**நீண்டவராக மலைமாநிலங்கிண்டி நின்றறியா**
**ணுண்டவராக மலைகுனித்தான்மறை நற்பதியான்**
**மாண்டவராக மலையாமல்வைப்பவன் வான்புகழை**
**வேண்டவராக மலைக்குமுன்றேன்றும் வெறுந்தௌவையே.**

(இ-ள்.) நீண்டவராகம் அலைமாநிலம் கிண்டி நின்று அறியான்-பெரிய வராகமாகிய திருமால் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் பிளந்துசென்றும் அரிதற்கரிய திருவடியை யுடையார், நாண்தவராக மலைகுனித்தான் - நாணினை யுடைய வில்லாக மேருமலையை வளைத்தவர், நல்மறைப் பதியான் - நல்ல திருமறைக்காடென்னும் திருப்பதியை யுடையார், மாண்டவர் ஆகம் அலையாமல்வைப்பவன்- தமது பதியில் இறந்தோரை (எழுவகைத் தோற்றமாகிய) உடல்களோடு கூடி வருத்தமுற்றலையாமல் (சாரூபம் தந்து முத்திக்கண்) வைப்பவர், வான்புகழை வேண்ட - (இவரது) மேலாயபுகழை வேண்ட, கமலைக்குமுன் தோன்றும் வெறுந் தௌவைவரா - இலக்குமிக்கு முன்பிறந்த வறிய மூதேவி வராது — (எ-று) 4-ம் அடியில்வரா என்பது துவ்விகுதி குறைந்துநின்றது. மாண்டவராக மலையாமல் வைப்பவன் என்பதற்கு மாட்சிமைப்பட்ட தவத்தர்களது காயத்தை அலையாமல் வைப்பவர் எனப் பொருள் கூறுவாருமுளர். மாயை முதலிய மலங்களை ஒழித்து முத்தியைத்தந்தருளு மிறைவர்க்கு அம்மாயாகாரியமாகிய காயத்தை அலை யாமல் வைப்பது கூடாமையின் அஃதுரையன்மையா மாறுணர்க. 74

**வெறும்பத்திநிச்சயமில்லேனை யாட்கொண்டு வீட்டில்வைப்பா**
**யுறும்பத்தினிற்பத்து மாமகன்மாலய னும்பருக்கு**
**மெறும்பத்திநிற்குங் கடைமுதலாவி யெவைக்குமருள்**
**பெறும்பத்தினிபங்க னேமறைக்கானப் பெருஞ்சுடரே.**

(இ-ள்.) பத்தி நிச்சயம் இல் வெறுமையேனை - பத்தியும் உறுதியும் இல்லாத வறியேனை, ஆட்கொண்டு வீட்டில் வைப்பாய் - அடிமைகொண்டு முத்திக்கண் வைத்தருளும், பத்தினிற்பத்து உறும் மாமகன்மால் அயன் உம்பருக்கும்- நூறு பெரிய யாகத்தைச்செய்த இந்திரனுக்கும், திருமாலுக்கும், பிரமனுக்கும், தேவர்களுக்கும், அத்தி முதல் எறும்புகடை நிற்கும் ஆவி எவைக்கும் அருள்-அத்தி முதல் எறும்பு ஈருகப் பொருந்திய மற்றச் சீவகோடிகளெ வற்றிற்கும் அருளுகின்ற, பத்தினிபெறும்பங்கனே - உமா தேவியாரைப்பெற்ற பாதித்திருமேனியையுடையவரே, மறைக்கானப் பெருஞ்சுடரே - திருமறைக்காட்டிலெழுந் தருளிய பெரிய சோதி வடிவினரே—(எ-று) இல்லேனை என்பதின் விகுதியையும் உருபையும் பிரித்து வெறுமை யென்னும் பண்போடு கூட்டப்பட்டது. 75

**பெருங்காசினித்தலங் கொண்டாடியாடிப் பிறங்குகங்கை**
**யருங்காசிநித்த முறைவோர் மறைசை யமலர்வெற்பின்**
**மருங்காசினித்தலை கொள்ளவிடாதென மார்பகத்தே [தே.**
**பருங்காசினித்தகைப் பூண்கொங்கைமங்கைக்குப் பாரித்த**

(இ-ள்.) பெருங்காசினித்தலம் கொண்டாடி ஆடிப் பிறங்குகங்கை - பெரிய உலகில் உள்ளார் துதித்து நீராடப்பெற்று விளங்கும் கங்கைநதி சூழ்ந்த, அருங்காசி நித்தம் உறைவோர் - அரிய காசியாகிய திருப்பதியில்

நித்தியமாய் வசித்தருளுவோர், மறைசை அமலர் - திருமறைக்காட்டில் எழுந்தருளிய நிருமலர் இவரது, வெற்பின்-மலையினிடத்தே, மருங்கு இனி ஆசுதலை கொள்ளவிடாது என - இடையை இனிச் சிறிதும் தலை எடுக்க விடாது என்னும் வண்ணம், மார்பு அகத்தே பருங்காசின் பூண் கொங்கை இத்தகை மங்கைக்குப் பாரித்தது - மார்பினிடத்தே பெரிய மணிகளாலாகிய ஆபரணத்தை அணிந்த தனமானது இவ்வழகினையுடைய பெண்ணுக்குப் பாரித்து செவ்வியடைந்தது — (எ-று) இது பருவங்கூறி வரைவு கடாதல். (76)

**பாரிக்குமார முலையுமையாட்கும் பகீரதியா**
**நாரிக்குமாரப் பரமுஞ்சிரமு நயந்தளித்தான்**
**முரிக்குமாரனைத் தந்தான் மறைசையின் மூர்த்திதந்தான்**
**தாரிக்குமாரனுக் கில்லையென் மேற்பகை சாதிப்பதே.**

(இ-ள்) பாரிக்கும் ஆர முலைஉமையாட்கும் பகீரதியாம் பருத்த முத்துவடங்களை அணிந்த முலையினையுடைய மாதேவியாருக்கும் கங்கையாகிய பெண்ணிற்கும், ஆரப் புரமும் சிரமும் நயந்து அளித்தான்-பொருந்துமாறு பாதித் திருமேனியினையும் திரு முடியினையும் முறையே அன்போடு தந்தருளினர், மூரிக்குமாரனைத் தந்தான் - வலிய முருகக் கடவுளைப் பெற்றவர், மறைசையின் மூர்த்தி - திருமறைக் காட்டி லெழுந்தருளிய சிவபெருமான், தார்தந்தான்-(இவர்) எனக்குக் கொன்றைமாலை தந்தருளினர்; ஆதலால் இக்குமாரனுக்கு என்மேல் பகை சாதிப்பது இல்லைஏ-கருப்பு வில்லினையுடைய மன்மதனுக்கு என்மேற் பகை சாதிப்பது இனி இல்லையாய் ஒழியும் — (எ-று) இது மாலையைப் புகழ்தல். (77)

**சாதிப்பராகம மென்பயன் வேட்டுவன் சாதிப்புழு**
**வேதிப்பராகம் பெறல்போலமெய்க்குரு வாற்பெற்றியான்**
**பூதிப்பராக மணிந்தன்பனுவதெப் போதருளா**
**யாதிப்பராகவி னுன்மறைக்காணத்தெண் ணம்புய.**

(இ-ள்.) ஆகமம் சாதிப்பர் பயன் என்- (அனுபவஞான மின்றி) ஆகமத்தைச் சாதிப்பர் அதனுற்பயன்யாது?, வேட்டுவன் சாதிப்புழு வேதிப்பு அராகம் பெறல் போல-வேட்டுவன் என்னும் அளியானது உயர்வாகிய புழுவைக் கூட்டினிடத்தே வைத்து ஊதுதலினுல் அது பொன்னிறமடைதல் போல, மெய்க்குருவாற் பெற்று யான் பூதிப்பராகமணிந்து அன்பன் ஆவது எப்போது - உண்மை ஞானத்தைச் சற்குருவால் உபதேசிக்கப் பெற்றுத் திருவெண்ணீற்றைத் தரித்து உமதடியவனுக யான் ஆவது எக்காலம்? அருளாய் - அருள் செய்வீராக, ஆதிப்பரா - ஆதியாகிய கடவுளே, கவின் நான் மறைக்கானத்து எண் அம்புயனே - அழகு பொருந்திய திருமறைக்காட்டினிடத் தெழுந்தருளிய எட்டுப்புயங்களையுடையவரே—(எ-று.) வேதிப்ப ராகம் எனப் பிரித்துப் பொருள் கூறுதலுமுண்டு. (78)

**புயற்கூடுபோம்பொழில் வேதாரணியன்பொன் னுட்டகத்தே**
**மயற்கூடுமாடவர் நாரியராருயிர் வாரியுண்ணு**
**முயற்கூடுதாக்க விருற்கூடுடையு முடிச்சிலம்பா**
**கயற்கூடுகண்ணிடை யாகாசந்தீட்டுதல் கைக்கரிதே.**

(இ-ள்) புயற்கு ஊடுபோம் பொழில் வேதாரணியன் பொன்நாட்டகத்தே - மேகமண்டலத்தினூடே செல்லும் சோலைகள் சூழப்பெற்ற திருமறைக்காடரது அழகிய காட்டினிடத்தே, மயற்கு ஊடும் ஆடவர் நாரியர்ஆர்உயிர் வாரியுண்ணும் முயற்கூடுதாக்க - காமத்தாற் பிணங்குகின்ற

மைந்தர் மங்கையரது அரிய உயிரை அள்ளியுண்ணும் சந்திரன் மோதுதலினாலே, இறுற்கூடு உடையும் முடிச்சிலம்பர் - தேனடைகள் உடைகின்ற சிகரம் பொருந்திய மலையினை உடைய தலைவனே, கயல்கூடுகண் இடை ஆகாசம் தீட்டுதல் கைக்கு அரிது ஏ - காதினைக் கூடும் சேற் கெண்டையை யொத்த கண்ணினையுடைய தலைவியின் இடையாகியஆகாச வடிவத்தை எழுதுதல் உமது கைக்கு அரிதாம். (எ-று.) கயற் கூடுகண் அன்மொழித் தொகை. இது தலைமகளவையவத் தருமை சாற்றல். (79)

**அரிதிரிகைக்கு வடுவாழ்மறைசை யரன்வறுமை**

**பெரிதிரிகைக்குவந் தாண்டான்மெய்ஞ்ஞானம் பிறங்குசுடர்**

**விரிதிரிகைக்கு வினையேனிடத்தில் விளங்குமட்சக்**

**கிரிதிரிகைக்கு நிகராம்பிறப்புங் கெடுவிப்பனே.**

(இ-ள்.) அரிதிரிகைக்குவடுவாழ் மறைசை அரன் - சிங்கங்களும் சஞ்சரிக்கும் யானைகளும் (பகையின்றி) வாழப் பெற்ற திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற சங்கார கருத்தர், பெரிது வறுமை இரிகைக்கு வந்து ஆண்டான் - எனது பெரிதாகிய அறிவின்மை நீங்குமாறு வந்து என்னை ஆட்கொண்டருளியவர், பிறங்கு மெய்ஞ்ஞானம் விரிசுடர் - விளங்குகின்ற மெய்ஞ்ஞானமாகிய கிரணங்கள் விரிந்த சூரியனையுள்ளார், திரிகைக்கு வினையேனிடத்தில் - மாறுபட்ட ஒழுக்கத்தினையுடைய தீவினையேனிடத்தில், விளங்கும் மட்ச கிரிதிரிகைக்கு நிகர் ஆம் பிறப்பும் கெடுவிப்பன் ஏ - விளங்குகின்ற மட்பாத்திரம் செய்யும் குயவனது சக்கரத்தையொத்து மாறி மாறி வரும் பிறப்பினையும் கெடுத்தருளுவர் — (எ-று.) கை - ஒழுக்கம். கு - தீமை, பாபம். மெய்ஞ்ஞானச்சுடர் விரிதிரியெனப் பிரித்து, மெய்ஞ்ஞான விளக்கில் விரிந்த திரியானவர் எனப் பொருள் கூறுவாருமுளர். அவ்

வுவமை சிவத்துவியாபகமுற்ற பாசபசுக்களிலொன்றையு ணர்த்துமாகலின் அது பொருளன்று என்க. மெய்ஞ்ஞானச் சுடர் விரியெனக் கொண்டுகூட்டி, மெய்ஞ்ஞானச்சுடரின் விரிவேயென்று கூறினும் அமையும். (80)

**கெடுப்போனகந்தையை நான்முகன்கேசவ னுர்க்குமுண்டோன்**
**கடுப்போனகந்தையற் பங்கின்வைத்தான்மறைக் கானுவந்தா**
**னடுப்போனகந்தை யுடையான்சிலம்பினம் மாதையொப்பாய்**
**வடுப்போனகந்தை மணிமுலைநின்குறை மற்றிலையே.**

(இ-ள்.) நான்முகன் கேசவனுர்க்கும் அகந்தையைக் கெடுப்போன் - நான்கு முகத்தினையுடைய பிரமனுக்கும் திருமாலுக்கும் அகந்தையை நீக்கியருள்பவர், கடுப்போனகம் உண்டோன் - ஆலகாலவிடமாகிய உணவையுண்டவர், தையல் பங்கின்வைத்தான் - உமாதேவியாரைப் பாதித் திருமேனியில் வைத்தவர், மறைக்கான் உவந்தான் - திருமறைக்காட்டில் மகிழ்ந்துறைவோர், கந்தை போன நடு உடையான் - ஆடை நீங்கிய இடையினையுடைய திகம்பரர், சிலம்பில் நம்மாதை ஒப்பாய் - இவரது, மலையினிடத்தே வாழும் எமது தலைவியை (உருவத்தால்) ஒத்திருக்கின்றனை, நகம் தை மணி முலை வடு நின்குறை மற்று இலை போல் - நகம்தைத்த அழகிய முலையினிடத்துள்ள வடுவே நினக்குக்குறையாம் வேறு (குறை) இல்லை-(எ-று) போல். ஏ அசை, இது தலைவனோடு புணர்ந்துவந்த தலைவியைத் தோழி வேறுபடுத்துக் கூறி நகையாடல். 81

**மற்றலத்தேரைய மின்றிநெஞ்சேயென்ன மாயங்கொல்லோ**
**முற்றலத்தேரை விடுஞ்சாலிற்சங்க முழங்குபண்ணைப்**
**பொற்றலத்தேரை மறைமறைக்கானப் புனிதன்கல்லுட்**
**பற்றலத்தேரைக்கு மேயளந்தானெப் படிப்படியே.**

(இ-ள்,) நெஞ்சே- (பிழைப்பிற்கு ஓர் வழியுமில்லையே யெனச் சலனமுறுகின்ற) மனமே, என்ன மாயம் கொல் ஓ- என்ன மாயம், ஏரைரவிடு முற்று அலத்துச் சாலிற் சங்கம் முழங்கு பண்ணை - ஏரினை யோட்டுகின்ற வளைந்த படைச் சாலிற் சங்குகள் ஒலிக்கும் வயல் சூழ்ந்த, பொற்ற லத்து ஏரை மறை மறைக்கானப் புனிதன் - பொன் னுலகத்தழகினையும் (தன்னொளியால்) மறைக்குந் திரு மறைக்காட்டி லெழுந்தருளிய சிவபெருமான், கல் உட் பற்று அலத்தேரைக்குமே படிஅளந்தான் - கல்லின் உள்ளி டத்தமைந்த தேரைக்கும் படியளந்தருளினர், எப்படி-அது எப்படியோ அப்படியே நமக்கும் படியளப்பாரேயன்றி, மற்று அல - வேறல்ல, ஐயம் இன்றித்தேர் - இதனைச் சந் தேகமின்றித் தெளிதி. — (எ-று) எப்படி என்றதனுல் அப் படியே என்பதும் தேரைக்குமே படியளந்தாரென்றதனுல் நமக்கும் படியளப்பா ரென்பதும் அவாய் நிலைபற்றி வரு வித்துரைக்கப்பட்டன, கொல், ஓ, ஏ, அசை. "கல்லுட் பற்றுதலாகிய அத்திறத்தையுடைய தேரைக்குமே எவ் வண்ணம் படியளந்தார். இது யாது மாயமோ ? சங்கை யின்றியறிதி. அதற்குணவு கிடைப்பது பிறிது யாதொரு வழியானுமன்று" என்னும் உரை பொருளியைபு இன் மையிற் பொருந்தா தென்றுணர்க. (82)

படிகந்தனையனை யாமறைக்காடான்பொற் பாணியில்வேல்
பிடிகந்தனையரு டாதையனுடைகப் பேரவனைக்
கடிகந்தனைமுகில் காணுனையேத்தக் கருதுநெஞ்சே
விடிகந்தனைய மடவார்கலக விழிமையலே.

(இ-ள்.) படிகந்தனையனையான் - படிகத்தினை யொத்த நிரு மலர், மறைக்காடன் - திருமறைக்காடர், பொன் பாணி

யில் வேல்பிடிகந்தனை அருள்தாதையன் - அழகியகையினிடத்து வேலைத்தாங்கிய முருகக்கடவுளைப் பெற்ற பிதா, ஆடகப்பேரவனை கடிகந்து அனைமுகில்காணுனே - இரணியனைக் கொல்லும் (நரசிங்கமாகித்) தூணுகிய தாயினிடத்துப் பிறந்த மேகம் போன்ற திருமாலாற் காணப்படாதவர்; நெஞ்சே ஏத்தக் கருது - இவரை மனமே துதிக்க எண்ணுவாயாக, அனைய மடவார் கலகவிழிமையல் இகந்துவிடு ஏ - நீ விரும்பிய அத்தன்மையையுடைய பெண்களது துன்பத்தையுண்டாக்கும் விழியினுலாகும் காமமயக்கத்தை ஒழித்து விடுவாயாக.—(எ-று) தாதையன் என்பதில் அன் பகுதிப் பொருள் விகுதி. விடு என்பதில் முற்றுகரங்கெட்டது. (83)

**மையகற்றுனை முகன்ருதைமாணிக்க வாசகனு**
**மெய்யகற்றுனை மகிழ்மறைக்காடனை வேண்டியுன்னுஞ்**
**செய்யகற்றுனைமுக் கோலந்தணீர்சுரஞ் சென்றனரோ**
**துய்யகற்றுனைப் புரந்தானன்னுைநந் தோகையுமே.**

(இ-ள்.) மை அகற்று ஆனைமுகன்தாதை - விக்கினங்களைப் போக்கியருளும் யானை முகக் கடவுளுக்குப் பிதாவாகியவரும் மாணிக்க வாசகனும் மெய்யகற்றுனை மகிழ்மறைக்காடனைக் - மாணிக்கவாசராகிய உண்மைப் பொருளுணர்ந்த திருத்தொண்டரை மகிழ்ந்து கொண்டருளிய திருமறைக்காடருமாகியவரை, வேண்டி உன்னும் செய்ய கற்றுனை முக்கோல் அந்தணீர் - விரும்பித் தியானிக்கின்ற சிவந்த கற்காவி தோய்ந்த ஆடையினையும் திரிதண்டத்தையுமுடைய வேதியரே, சுரம் சென்றனரோ ?, சுரத்துப் போயினரோ? துய்யகன்று அனைபுரந்தான் அன்னுனும் நந் தோகையும். ஏ- பரிசுத்தமாகிய கன்றுப் பசுக்களைக்காத்த

திருமாலையொத்த ஓர் தலைவனும் எங்கள் பெண்ணும்(எ-று) கற்று வலித்தல்விகாரம். இது வேதியரை வினுதல். (84)

**தோகையிராமன் மதபாணமங்கந் துளைத்ததுகா**
**ரீகையிராமன் விதிகற்பமானதென் மீதிற்சற்று**
**மோகையிராமன் மறந்தாரிராவண னுட்கவென்ற**
**வாகையிராமன் பணிமறைக்காடர்வந் தாரிலையே.**

(இ-ள்.) தோகையிர் ஆ மன்மதபாணம் அங்கம் துளைத்தது - மங்கையர்களே, ஆ! மன்மதனுடைய பாணங்கள் என்னுடலைத் துளைக்கின்றது, கார் ஈகை இராமன் விதிகற்பம் ஆனது - இருளினைத் தருகின்ற இரவோ நிலைபெற்ற பிரமனது கற்பம் போல் நீண்டுவிடுகின்றதில்லை, என் மீதிற் சற்றும் ஓகைஇராமல் மறந்தார் - என்மீதிற் சிறிதும் அன்பின்றி மறந்தார் - என்மீதிற் சிறிதும் அன்பின்றி மறந்தவராகி, இராவணன் உட்கவென்ற வாகை இராமன் பணி மறைக்காடர் வந்தாரிலை - இராவணன் மடியச் செயித்த வெற்றியினையுடைய இராமனுற் பணியப்பெற்ற திருமறைக்காட்டீசர் வந்தனரில்லை. (எ-று) மறந்தார். முற்றெச்சம். இரவினீட்டத்துத் தலைவி வருந்தல். (85)

**வந்தித்திக்குங்கணை யுங்கொண்டவேள்பணி மான்குழற்கா**
**டுந்தித்திக்குங்கனி வாயும்வெண்முரலு மொண்துழையும்**
**பந்தித்திக்கும்பெறத் தோன்றியவேதப் பதியன்பொற்கு**
**ளுந்தித்திக்குந்தகு மென்னமன்றுடு மரன்கிரிக்கே.**

(இ-ள்) வந்தித்து இக்கும்கணையும் கொண்ட வேள்பணி மான் - வணக்கஞ்செய்து கருப்புவில்லினையும் மலர்க்கணை

யினையுமுடைய மன்மதனும் பணியத்தக்க மான்போன்றவளது, குழற்காடும் தித்திக்கும் கனிவாயும் வெண்முரலும் ஒண்குழையும்-கூந்தற்செறிவும் மதுரமான கனியையொத்த வாயும் வெண்மையாகிய பற்களும் ஒளிபொருந்திய காதும், பந்தித்திக்கும் பெறத்தோன்றிய - வரிசையாய் (யான் காணப் பெறுமாறு) எத்திக்கினும் தோன்றுகின்றன, பொற்றுளம் தித்திக்கும் தகும் என்ன மன்றுடும் அரன் வேதப்பதியன் கிரிக்கு ஏ - பொற்றுளம் தித்திக்கும் தகுமென்னப் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற சங்கார கருத்தராகிய திருமறைக்காடரது மலையினிடத்தே. (எ-று.) இஃது உருவெளித் தோற்றம். (86)

**அரம்பையங்காட்டக வேதாரணியத்த னுவியச்சுக்**
**குரம்பையங்காட்டவல் லான்சித்தசித்தன் குரூஉச்சடில**
**சிரம்பையங்காட்ட வணிந்தோனரவிந்தச் சேவடியன்**
**பரம்பையங்காட்ட வெரிமுன்பஞ்சாகப் பறந்திடுமே.**

(இ-ள்) அரம்பை அம் காட்டக வேதாரணியத்தன் - வாழைகளின் அழகிய வனத்தினிடத்தேயுள்ள திருமறைக்காட்டையுடையார், ஆவி அச்சுக்குரம்பை அங்கு ஆட்டவல்லான் - உயிரினையுடைய உடலாகிய கூட்டை (வினைப்பயனை நுகர்தற்குரிய) அவ்வவ்விடங்களில் ஆட்டவல்லவர், சித்து அசித்தன் - சித்தாயும் அசித்தாயும் உள்ளவர், குரூஉச்சடில சிரம்பயங்காட்ட அணிந்தோன் - (செந்)நிறம் பொருந்திய சடாமகுடத்தில் கங்கையைக் காட்டும் வண்ணந் தரித்துள்ளார், அரவிந்தச் சேவடி அன்பர் அம்பயம் - இவரது, தாமரை மலர்போலும் செவ்விய திருவடிக்கு அன்பினையுடையாரது பயமானது, காட்ட எரிமுன் பஞ்சு ஆகப் பறந்திடும் - விறகிற்பற்றிய அக்கினியின் முன் பஞ்சு போல விரைவில் ஒழியும். (எ-று.) 4-ம் அடியில் அம் சாரியை, சேவடியென்

பரம் எனப் பாடங்கொண்டு சேவடி எனக்கு முத்தித்தான மாயிற்று எனக்கூறுவாருமுளர். அதான்றிச் சேவடி யெனக்குப் பாரமாயிற்றெனப் பொருள் கூறின் மலங்களாகிய பாரத்தை ஒழிக்குந் திருவடி பாரமாவதெவ்வாறென்க. ஆவியென்னுங் பதத்தைத் தனியே பிரித்து உயிருக்குயிராய் நிற்பவனெனக் கூறலுமொன்று (87)

**பறக்கும்பருந்துவக் குங்கழியூன்முடைப் பற்றுளதா**
**யிறக்கும்பருந்துவக் காக்கையைநீக்கி யினிப்பொதிய**
**வறக்கும்பருந்து தமிழ்மறைக்காட னருளைக்கொண்டு**
**திறக்கும்பருந்துதித் தற்கரிதாமுத்திச் சீர்க்கதவே.**

(இ-ள்.) பறக்கும் பருந்து உவக்கும் கழிமுடை ஊன்பற்று உளதாய் - பறக்கின்ற பருந்து உணவாகமகிழும் முடை நாற்றத்தினையுடைய மாமிசப் பற்றுள்ளதாகி, இறக்கும் பருந்துவுக்கு ஆக்கையை நீக்கி - அழிகின்ற பெரிய தோல் மூடிய சரீரத்தை ஒழித்து, இனிப் பொதிய அறர்கும்பர் உந்து தமிழ் மறைக்காடன் அருளைக் கொண்டு-இனிமேல் பொதிய மலையில் வசிக்கின்ற புண்ணிய வடிவம் ஆகிய கும்பத்துத் தோன்றிய அகத்திய முனிவர் உயர்த்திய தமிழ் வழங்கும் திருமறைக் காடர் அருளால், உம்பருந்துதித்தற்கு அரிது ஆம் சீர்முத்திக் கதவு திறக்க ஏ-தேவர்களுந் துதித்தற்கு அரிதாகிய சிறப்பினையுடைய முத்திக் கதவுகளைத் திறப்பீர்களாக —(எ-று) திறக்க என்பதில் அகரம் தொகுக்கப்பட்டது. திறக்கு எனப் பிரித்து திறப்பேன் எனினும் ஆம். (88)

**நகவாயதீரங்கி மண்காயமான கடவுளினை**
**யுதவாயுமப்பனு மானவன்வேத முறைவனத்தான்**
**பதவாயுதக்கொடி வேடாதைகீர்த்தியைப் பாடுதற்குச்**
**சதவாயுநாவுந்தந் தானில்லைவாணி தலைமகனே.**

(இ-ள்.) மண் நீர் அங்கி கதவாயுகாயம் ஆன கடவுள்-நிலமும் நீரும் நெருப்பும் வேகமுடையகாற்றும் ஆகாயமும் ஆகிய கடவுள், ஏனை உதவு ஆயும் அப்பனும் ஆனவன்-என்னைப்பெற்ற மாதாவும் பிதாவுமாயுள்ளார், வேதம் உறைவனத்தான் - வேதம் வசிக்கின்ற திருமறைக்காடர், பதவாயுதக் கொடிவேள் தந்தை - காலினை ஆயுதமாகப் பெற்ற கோழிக் கொடியினையுடைய முருகக்கடவுளின் பிதா, கீர்த்தியைப் பாடுதற்கு - இவரது புகழை யான் பாடித் துதிக்கும் பொருட்டு, வாணி தலைமகன் சதவாயும் நாவும் தந்தானில்லை - சரசுவதி நாயகனான பிரமன் நூறு வாயினையும் நூறு நாக்கினையும் படைத்தானில்லை: (எ-று.).

(89)

**மகரசலந்தர ளந்தருவேத வனத்தன்புய**
**சிகரசலந்தர னுவியுண்டானடல் சேர்ந்திலங்கு**
**முகரசலந்தர வரலாசனுவுரி யங்கையொற்றைப்**
**புகரசலந்தரப் போர்த்தாயெனவினை பொன்றிடுமே.**

(இ-ள்) மகரசலம் தரளம் தரு வேதவனத்தன் -மகர மீனுடைய கடல் முத்தினைக்கொழிக்கும் திருமறைகாட்டினையுடையவராகியும், புயசிகரசலந்தரன் ஆவியுண்டான் - புயமலையினையுடைய சலந்தரன் என்னும் அசுரனுடைய உயிரை வாங்கியவருமாகிய சிவபெருமானே, அடல் சேர்ந்து இலங்கும்-வலிமை பெற்று விளங்கும், அரவு அரசு அலந்து உகு ஆல அசனு - வாசுகி என்னும் அரவரசன் (அமிர்தங் கடைகையில்) வருத்த முற்றுக் கக்கிய விடத்தினையுணவாகக் கொண்டருளியவரே, ஒற்றை அம் கைப்புகர் அசலம் உரிதரப் போர்த்தாய் - ஓர் அழகிய துதிக்கையினையும் கபில நிறத்தினையுமுடைய யானை தோலினைத்தர அதனை போர்த்தவரே, என வினை பொன்றிடும் ஏ - என்று

துதிக்க நமது கன்ம பந்தம் கெட்டொழியும் — (எ-று) அர வரசலந்துகு எனற்பாலது எதுகை பற்றி உகரசலந்தரவு என நின்றது. அடல் சேர்ந்திலங்கு முகரசலந்தர வாலா சனு என்றதற்கு "வலிமை பொருந்தி விளங்கா நின்ற உகரமென்னப்பட்ட வயிரத்தைக்கொண்ட காளபோச னரே" என்னும் உரைபோலியுரையா மென்றுணர்க. அன்றி யும் உகரசலந்தர என்னுந் தொடர்க்கு- உகர சொரூபி யாகிய ஜலவர்ணனைத் தரித்தவரே எனக் கூறினுமமையும்.

**பொன்றுதையம்புயத் திண்காலனஞ்சிப் புரண்டுவிழ**
**நின்றுதையம்புயத் தாண்மறைக்காட னிழல்வெற்பினி**
**ரொன்றுதையம்புயங் கண்வாய்விழுங்கிய தோமணித்தே**
**ரென்றுதையம்புயன் மூடியதோநின் றியம்பிடுமே.**

(இ-ள்) பொன்துதை அம்புயத்திண் காலன்-பொன்னணி பூண்ட அழகிய புயத்தினையுடைய வலிய இயமன், அஞ்சிப் புரண்டுவிழ நின்று உதை அம்புயத்தாண் மறைக்காடன்- பயந்து வீழ்ந்து புரளும்படி நின்று உதைத்த தாமரை மலர்போன்ற திருவடியினையுடைய திருமறைக்காடரது. நிழல்வெற்பினீர் - குளிர்ச்சி பொருந்திய மலையிலுள்ள மங் கையர்களே, உது ஒன்று ஐயம் - இது ஒன்று எனக்குச் சந் தேகமாகின்றது, மணித்தேர் உதையம் என்று புயங்கன் வாய் விழுங்கியதோ - அழகிய தேரில் உதையம் செய்யும் சூரியனை (க்கேதுவென்னும்) பாம்பு வாயினால் விழுங்கி யதோ , புயல் மூடியதோ நின்று இயம்பிடும் ஏ - அல்லது மேகம் மூடிமறைத்ததோ அதனை நின்று ஆராய்ந்து சொல் வீராக. (எ-று) (91)

**இயக்கோடையாம்பன் முசுகுந்தனேத்து மிறைவவண்டு**
**மூயக்கோடையாம்பன் மலர்மறைக்கான்முத லேசுருதிச்**
**சயக்கோடையாம்பன்முத் தேயடியேன்சட் டகம்விடுநாண்**
**மயக்கோடையாம்பன் மருந்தேநின்பார்வை வழங்குதியே.**

(இ-ள்) ஓடை ஆம்பல் இயக்கு முசுகுந்தன் ஏத்தும் இறைவ - முகபடாம் அணிந்த யானையினைச் செலுத்தும் முசுகுந்தச் சக்ரவர்த்தி துதிக்கும் இறைவரே, ஓடைவண்டு முயக்கு ஆம்பல் மலர்மறைக்கான்முதலே - ஓடைகளில் வண்டுகள் இணைதலையுடைய ஆம்பல் மலர்கள் மலருகின்ற திருமறைக் காட்டு முதல்வரே, சுருதிச் சயக்கோடை ஆம் பல் முத்தே - வேதமாகிய வெற்றி பொருந்திய குதிரையை யுடைய அழகிய மூங்கிலிற்றோன்றிய முத்தாயுள்ளவரே, அடியேன் சட்டகம் விடும் நாள் மயக்கோடு ஐ ஆம் - உமக் கடிமையாகிய எனது உடல் நீங்குங் காலத்து அறிவு மயங் குதலுடனே கபமும் உண்டாகும், பன்மருந்து நின்பார்வை யே வழங்குதி - அவை தீர்தற்குரிய பலமருந்தும் உமது அருட்பார்வையே யாமாதலின் அதனை அப்பொழுது வழங் குவீராக.—(எ-று.) உயிர்ப்பிணியாகிய மயக்கமும் உடற் பிணியாகிய கபம் முதலியனவும் நீக்குதலிற்பார்வை பன் மருந்தெனப்பட்டது. அன்றியும் சகல மருந்தின் வலிமை யும் அருட்பார்வைக்கு உளதாதலின் பன்மருந்தென்றுரெ னினும் அமையும். (92)

**குதிக்குஞ்சிதரரிக் கட்கயற்பாவை கொழுநன்மன்றிற்**
**சதிக்குஞ்சிதநடத் தான்கொன்றைமாலை தவழ்குழவி**
**மதிக்குஞ்சிதங்கிய வேணியன்வேத வனத்தலத்தி**
**லுதிக்குஞ்சிதலை யெறும்பாதிபேற்றை யுரைக்கரிதே**

(இ-ள்) குதிக்கும் கயல்சிதர் அரிக்கண்பாவை கொழு நன் - தாவுகின்ற சேலினையும் வண்டினையும் வரி பொருந் திய கண்ணினையுமுடைய உமாதேவியாருக்கு நாயகர், மன் றிற்சதிக்குஞ்சித நடத்தான்-சபையினிடத்தே சதிபொருந் திய குஞ்சித நடனத்தையுடையார், கொன்றைமாலை தவழ் குழவி மதிக் குஞ்சி தங்கிய வேணியன் - கொன்றை

மாலையும் தவழுகின்ற இளம்பிறையும் பொருந்திய குஞ்சியாகிய சடையினையுடையார், வேதவனத் தலத்தில் - இவரது திருமறைக்காடென்னும் திருப்பதியில், உதிக்கும் சிதலை எறும்பு ஆதிபேற்றை உரைக்க அரிது - பிறக்கும் கறையான் எறும்பு முதலிய பிராணிகளும் பெறுபேற்றினை நாம் உரைக்க அரிது. (எ-று) ஏ - அசை, சதி தாளவொத்து(93)

உரைத்தென்னவண்மை பரன்மறைக்கானுறை யோங்கல்முகி
னிரைத்தென்னவன்மலி பூங்குழலாளெஞ் செனுமிரும்பைக்
கரைத்தென்னவன்னகைப் பூண்மரர்பஞ்சேரக் கருதுபொதி
வரைத்தென்னவன்கொடி சாடியவேல்விழி வாணகையே.

(இ-ள்) வண்மை உரைத்து என்ன - உனது பெருமையைச் சொல்வதினாற் பயன்யாது?, பரன் மறைக்கான் உறை ஓங்கல் முகில் நிரைத்தென்ன அல்மலி பூங்குழலாள் - சிவபிரானது, திருமறைக்காட்டில் இருக்கும் மலையிலே மேகங்கள் செறிந்தாற்போல இருள்நிறைந்த அழகிய கூந்தலையுடையாளது, நெஞ்செனும் இரும்பைக் கரைத்து - மனமாகிய இரும்பைக் கரையப்பண்ணி, என்னவன் நகைப் பூண்மார் பஞ்சேரக்கருது - எனக்குரியவனான தலைவனது ஒள்ளிய பூணினைத் தரித்த மார்பினை அவள் தழுவுதற்கு உபாயம் எண்ணுவாயாக, வரைத்தென்னவன் கொடி சாடிய வேல் விழி வாள் நகையே - பொதியமலையினையுடையானது கயற்கொடியைச் செயித்த வேல் போலுங் கண்ணினையும் ஒளி பொருந்திய நகையினையுமுடையாய்.-(எ-று.) பூங்குழலாள் - ஊடற்றலைவி இஃது பாங்கன் ஊடற்றலைவியின் தோழியோடுரைத்தல். இது புனல் விளையாட்டிற் பரத்தைத்தலைவியைச் சிறிய பரத்தையருள் ஒருத்தி மற்றொருத்தியோடுரைத்ததாகக் கொள்ளுவாருமுளர். (94)

**வானண்டருண்டி வழங்குஞ்செவ்வாய்ச்சி மணிகறங்கு**
**மானண்டர்வேயிசை கேட்கப்பொருளளை வாய்கவைத்த**
**கானண்டளையினி னத்தீனுமுத்தினைக் காமரன்னந்**
**தானண்டமென்றணைக் கும்மறைக் காட்டுறைசங்கரனே.**

(இ-ள்.) வான் அண்டர் உண்டி வழங்குஞ் செவ்வாய்ச்சி - மேலாய தேவாமிர்தத்தைக் கொடுக்கின்ற சிவந்த வாயினையுடைய எம்மாது, மணிகறங்கும் ஆன் அண்டர்வேய் இசைகேட்கப் பொருள்,—(கழுத்திற்கட்டிய) மணிகளொலிக்கும் பசுக்களைக் காக்கும் இடையர்களது புல்லாங்குழலினோசையைக் கேட்கச் சகிக்கின்றாளில்லை, கவைத்தகால் நண்டு அளையினின் நத்து ஈனுமுத்தினை - பிளப்பாகிய கால்களையுடைய நண்டு வளைகளில் சங்குகள் ஈன்ற முத்துக்களை, காமர் அன்னம் தான் அண்டம் என்று அணைக்கும் மறைக் காட்டு உறை சங்கரனே - அழகிய அன்னங்கள் முட்டையென்றெண்ணி அடை கிடக்கப்பெற்ற திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே.—(எ-று.) (95)

**சங்கமடங்கலை சூழ்மறைக்காடன் றடஞ்சிலம்பிற்**
**றுங்கமடங்கலை யன்னான்புரியுஞ்சொற் சூதையெண்ணேன்**
**பைங்கமடங்கலை நேரும்புறவடிப் பார்வைதகக்கோர்**
**சிங்கமடங்கலை கற்பாரென்றூர்பொற் சிலைநுதலே.**

(இ-ள்.) சங்கம் மடங்கு அலைசூழ் மறைக்காடன் தடஞ் சிலம்பில் - சங்குகள் பொருந்திய மடங்குகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த திருமறைக்காட்டீசரது அகன்ற மலையினிடத்தே, துங்க மடங்கலை அன்னான் புரியும் சொற்சூதை எண்ணேன் - வலிய சிங்கத்தையொத்த தலைவன் செய்த சொற்சூதினை யான் உற்று நினைத்தேனில்லை, பைங்கமடம்

கலைநேரும் புறவடிப் பார்வை - பசுமையான ஆமையையும் கலைமானையும் (முறையே) ஒத்த புறவடியினையும் கண்ணினையுமுடையவளே, பொன்சிலை நுதலே தக்கோர்மடம் சிங்கக் கலை கற்பார் என்றார் - அழகிய வில்லையொத்த நுதலையுடையவளே, பெரியோர் அறியாமை கெடும்வண்ணம் கலைகளைக் கற்பார் என்று கூறினர்.—(எ-று.) அஃது என்னைப்பிரிதற்குப் போலும் என்பது எஞ்சி நின்றது. இஃது ஓதற்பிரிவிற்றலைவி வருந்தல். (96)

**சிலைக்கோடுமேல் வைத்தகோற்றேனுடைந்த செந்தேறல்வயற்**

**றலைக்கோடும்வேத வனப்பெருமான் மலைச் சங்கரிதன்**

**முலைக்கோடுபட்ட தழும்பான்சடில முடிமணியாங்**

**கலைக்கோடுவெண் பிறை யைச்செங்கைகூப்புதி கார்மயிலே.**

(இ-ள்) சிலைக்கோடு மேல்வைத்த கோற்றேன் செந்தேறல் - மலையினது சிகரத்தின்மேல் (ஈக்கள்) வைத்த கொம்புத்தேன் கூடு உடைந்த செவ்விய தேன் ஆனது, வயற்றலைக்கு ஓடும் வேதவனப் பெருமான் - வயலினிடங்களுக்கு ஓடப்பெற்ற திருமறைக் காட்டிறைவர், மலைச்சங்கரிதன் முலைக்கோடுபட்ட தழும்பான் - பர்வதபுத்திரியாகிய உமாதேவியாரது தனங்களாகிய கொம்புபட்ட தழும்பினையுடைய சிவபெருமான் இவரது, சடிலமுடி மணியாம் - சடாமுடியில் வயிரமணியைப் போல விளங்கும், கலைக்கோடு வெண்பிறையைச் செங்கைகூப்புதி கார்மயிலே - கலைமானையுடைய வளைந்த வெண்மையாகிய பிறைமதியினைச் செவ்வியகை கூப்பித் தொழுவாயாக, கார்காலத்து மயில்போலுஞ் சாயலையுடையாய் (எ-று.) இஃது பிறைதொழுகென்றல். (97)